வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P .1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 30.05.2025 வெள்ளிக்கிழமை இதழ் : 150 பக்கங்கள் : 12

முன்னாள் அமைச்சர்களான

# மகிந்தானந்த, நளினுக்கு கடூழிய சிறை தண்டனை

## கொழும்பு மேல் நீதிமன்றம் விதித்தது

கொழும்பு, மே 30

**முன்னாள் அமைச்சர்களான மகிந்தானந்த அளுத்கமகே, நளின் ருவான்ஜீவ பெர்னாண்டோ ஆகியோருக்கு முறையே 20 மற்றும் 25 வருடங்கள் கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.**

அரசாங்கத்துக்கு 5 கோடியே 31 இலட்சம் ரூபாய்க்கு மேல் நிதி இழப்பை ஏற்படுத்திய குற்றத்துக்காகவே கொழும்பு மேல் நீதிமன்றின் 3 நீதிபதிகள் கொண்ட அமர்வு நேற்றைய தினம் இந்தத் தண்டனையை விதித்தது.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் காலத்தில் அப்போதைய விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே, சதொச நிறுவன தலைவர், வர்த்தக அமைச்சர் 11



## தமிழ் அரசு - காங்கிரஸ் இன்று சந்தித்து பேச்சு!

யாழ்ப்பாணம், மே 30

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் எம். பி. ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

கடந்த உள்ளூராட்சி மன்றங்கள் தேர்தலில் வடக்கு, கிழக்கில் முன்னிலை பெற்ற தமிழ் கட்சி ஆட்சியமைக்க ஆதரவு வழங்கப்பட வேண்டும் 11

## காங்கிரஸ், தமிழ் அரசு, கூட்டணி சந்திக்க வாய்ப்பு

யாழ்ப்பாணம், மே 30

அகில இலங்கை தமிழ் காங்கிரஸுடனான இன்றைய சந்திப்பின் பின்னர் தேவையேற்படின், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகிய மூன்று கட்சிகளும் இணைந்து கலந்துரையாட முடியும் என்று ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் த. சித்தார்த்தனிடம் தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார். 11

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி:

## எலும்புக்கூடுகளை அடையாளம் காட்ட அழைப்பு விடுக்கப்பட்டது

முல்லைத்தீவு, மே 30

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியில் மீட்கப்பட்ட 52 எலும்புக் கூடுகளை அடையாளம் காட்ட உதவுமாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்க பிரதிநிதிகள், காணாமல் போனோர் தொடர்பான பணிமனை என்பவற்றுக்கு நீதிமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி தொடர்பாக சட்ட மருத்துவ அதிகாரி குழுவால் தயாரிக்கப்பட்ட முழுமையான அறிக்கை நேற்று வியாழக்கிழமை முல்லைத்தீவு நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, நீதிபதி த. பிரதீபன் தலைமையில் விசாரணை நடைபெற்றது.

இதில், 11

## இந்தியாவுக்கு கச்சதீவை வழங்க இலங்கை சட்டத்தில் இடமில்லை!

கடற்றொழில் அமைச்சர் தெரிவிப்பு

கிளிநொச்சி, மே 30

"கச்சதீவை இந்தியாவுக்கு வழங்குவதற்கு இலங்கை சட்டத்தில் இடமில்லை ", இவ்வாறு கூறியுள்ளார் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சர் இ. சந்திரசேகர்.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நேற்று வியாழக் கிழமை நடைபெற்றது. இதன்பின்னர் கருத்து வெளியிட்டபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "கச்சதீவு சர்வதேச சட்ட விதிமுறைகளுக்கு அமைவாகவே இலங்கைக்கு 11



## மாகாண அதிகாரத்தை மத்தி கைப்பற்ற முயற்சி!

மன்னார் மருத்துவமனை விடயத்தில் சத்தியலிங்கம் எம். பி. குற்றச்சாட்டு

மன்னார், மே 30

மாகாண சபை நிர்வாகத்தின் கீழ் இயங்கிவரும் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையை மத்திய சுகாதார அமைச்சின் கீழ் கொண்டு வருவது மாகாண சபையின் அதிகாரத்தை மத்திய அரசு 11



## புகையிலை பொருட்களுக்காக ஒருநாளில் ரூ. 52 கோடி செலவு!

கொழும்பு, மே 30

நாட்டில் ஒருநாளில் புகையிலை பொருட்களுக்காக 52 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது என்று மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன், புகைத்தலால் ஓர் ஆண்டில் 20 ஆயிரம் பேர் உயிரிழக்கின்றனர் என்றும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

(தொடர்புடைய செய்தி பக்கம் 5இல்)

## மல்வத்து ஓயா திட்டத்தை துரிதப்படுத்த வேண்டும்!

ஜனாதிபதியிடம் ஜெகதீஸ்வரன் எம். பி. கோரிக்கை



- குமார. கோகுலன் -

வவுனியா, மே 30

மன்னார், வவுனியா செட்டிக்குளம் மக்களின் நன்மை கருதி மல்வத்து ஓயா திட்டத்தை துரிதப்படுத்துமாறு யோசனை முன்வைத்துள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் 11

## இந்த ஆண்டில் மட்டும் 50 துப்பாக்கி சூடுகள்!

கொழும்பு, மே 30

நடப்பு ஆண்டில் நேற்று வரையான காலப்பகுதியில் நாட்டில் 50 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 30 பேர் உயிரிழந்தனர். 11

## ஞானசார தேரர் விடுதலை; ஆவணங்கள் நீதிமன்றிடம்!

கொழும்பு, மே 30

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரை மன்னித்து விடுதலை செய்ய அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எடுத்த முடிவு தொடர்பான ஆவணங்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன 11

## 23 பேரை பலியெடுத்த விபத்துக்கு சாரதிக்கு ஓய்வின்மையே காரணம்

கொழும்பு, மே 30

தொடர்ச்சியாக ஆறரை மணி நேரம் பேருந்தை சாரதி செலுத்திச் சென்றமையே கொத்மலையில் 23 பேர் உயிரிழந்த பேருந்து விபத்துக்குக் காரணம் என்று விசாரணை குழு தெரிவித்துள்ளது.

கதிர்காமத்திலிருந்து குருநாகலுக்கு 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருந்தூர்மலையில் கைதான விவசாயிகளுக்கு மீளவும் மறியல்!

முல்லைத்தீவு, மே 30
குருந்தூர்மலையில் கைது செய்யப்பட்ட இரு விவசாயிகளையும் எதிர்வரும் ஜூன் 7 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

குமுழமுனை - தண்ணி முறிப்பு குளத்தின் கீழான நீர்ப்பாசனத்தின் ஊடாக விவசாயம் செய்யும் நோக்கில் தனது காணியை விவசாயிகள் இருவர் மூலம் கடந்த 10ஆம் திகதி ஒருவர் பண்படுத்தினார்.

இதன்போது, தொல்பொருள் தளத்தை சேதப்படுத்தியதாகக் கூறி ரஜமகா விகாரையின் விகாரதிபதி கல்கமுவ சாந்தபோதி தேரர் தொல்பொருள் திணைக்களத்துக்கு அளித்த முறைப்பாட்டை தொடர்ந்து நிலத்தை உழுதவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதான இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், அவர்கள் நேற்று வியாழக்கிழமை முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

இதன்போதே, இருவரையும் எதிர்வரும் ஜூன் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (ஐ)

# இலஞ்சம் வாங்கிய கிராம சேவகர் கைது!

யாழ்ப்பாணம், மே 30
யாழ்ப்பாணம் நகரத்தை சேர்ந்த கிராம சேவையாளர் ஒருவர் இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

4 ஆயிரம் ரூபாய் பெறுமதியான 'பென் ட்ரைவ்' ஒன்றை இலஞ்சமாக பெற்ற குற்றச்சாட்டிலேயே குறித்த கிராம சேவகர் இலஞ்சம், ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட கிராம சேவையாளர் சட்ட நடவடிக்கைக்காக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். கைதானவர் யாழ்ப்பாணம் நகர் பகுதியை சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-5)

# நுணாவில் மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய திருவிழா!

தென்மராட்சி, மே 30
சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த பெருந்திருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளன.

இதில், எதிர்வரும் ஜூன் 7ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு சப்பரதத் திருவிழாவும் அடுத்தநாள் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் நடைபெறும்.

தொடர்ந்து, செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் அன்று இரவு 7 மணிக்கு கொடியிறக்கமும் மறுநாள் புதன்கிழமை மாலை 5 மணிக்கு பூங்காவன திருவிழாவும் நடைபெறவுள் ன.

ஆலய பிரதம குரு சிவசிறீ து. கு. ஜெகதீஸ்வரக் குருக்கள், பெருந்திருவிழா குரு "கிரியா ரத்தினா" சிவசிறீ ராம் சண்முகானந்த குருக்கள், ஆலயகுரு பிரம்மசிறீ ராஜ்குருக்கள் யதீஸ்வர சர்மா ஆகியோர் கிரியைகளை நடத்தி வைப்பர். (ஐ)

# யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி குறித்து விசேட கலந்துரையாடல்!

யாழ்ப்பாணம், மே 30
யாழ். மாவட்டத்தில் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பில் விசேட கலந்துரையாடல் கடற்றொழில், நீரியல் வளங்கள் அமைச்சரும் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றது.

இந்த கலந்துரையாடலின் போது, "மீண்டெழும் அலைகள்" எனும் தூரநோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு, 2025 - 2035 ஆண்டுகளை மையமாக கொண்டு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன என்று அமைச்சர் தெரிவித்தார்.

இதன் மூலம், யாழ். மாவட்டத்தின் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, சுற்றுலா, சுற்றாடல் உள்ளிட்ட துறைகள் முழுமையாக மேம்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், "இந்த திட்டங்கள் வளமானதொரு யாழ்ப்பாணம் மாவட்டத்தை உருவாக்கும் ஒரு முக்கிய பக்கபலமாக அமையும். மக்களின் வாழ்க்கை தரம் மேம்படும். நாட்டின் பொருளாதாரத்திலும் நேரடி தாக்கம் ஏற்படும்," என்றும் அமைச்சர் கூறினார்.

இந்த கலந்துரையாடலில் தேசிய மக்கள் சக்தியை சேர்ந்த யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் க. இளங்குமரன், ஜெ. ரஜீவன், சிறீ பவானந்தராஜா, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் இணைப்பாளர் சிறீ வாகீசன், முன்னாள் விரிவுரையாளரும் தேசிய மக்கள் சக்தியை சேர்ந்த சு. கபிலன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ)

# தேசிய மக்கள் சக்தி கட்சியால் எமக்கு அநீதி இழைக்கப்பட்டது

## அந்தக் கட்சியினரே குற்றச்சாட்டு

வடமராட்சி, மே 30
தேசிய மக்கள் சக்தி தமக்கு அநீதி இழைத்துள்ளதாக கடந்த உள்ளூராட்சி தேர்தலில் பருத்தித்துறை பிரதேச சபையில் போட்டியிட்ட சிலர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

வடமராட்சி கிழக்கில் நேற்று அவர்கள் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தனர்.

மேலும்,
தேர்தலுக்கு முன்பு யாழ்ப்பாணம் நகரத்துக்கு எங்களை அழைத்த கட்சி தலைமைகள் தேர்தலுக்கு பின்னர் ஆசனங்களை பிரித்துக் கொடுப்பது தொடர்பில் அனைவருடனும் கலந்துரையாடியே இறுதி முடிவு எடுப்போம் என்று வாக்குறுதி தந்து வட்டாரங்களில் அதிக வாக்குகளை பெற தீவிரமாக செயல்படுமாறு கூறினர்.

ஆனால், தேர்தல் முடிவடைந்த பின் எங்களுடன் கலந்துரையாடாமல் வடமராட்சி கிழக்கு இணைப்பாளர் தனது மற்றும் இன்னொருவரின் பெயர்களை போனஸ் ஆசனத்துக்காக வழங்கியுள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட இருவரும் சொற்ப வாக்குகளையே பெற்றனர். ஆனால், இங்கிருக்கும் நாம் இவர்களை விட அதிக வாக்குகளை பெற்றோம். அவ்வாறு இருந்தும் எங்களுடன் கலந்துரையாடி ஆளுமையானவர்களுக்கு கொடுக்காமல் திறமையற்ற, ஊழலுக்கு துணைபோன குற்றச்சாட்டுள்ளவருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தி ஏனைய வேட்பாளர்களினதும் எமக்கு வாக்களித்த மக்களின் விருப்பங்களை கருத்தில் கொண்டு நீதியான நேர்மையான ஒரு முடிவை எமக்கு வழங்க வேண்டும். அவ்வாறு இல்லையேல், நாம் அனைவரும் கட்சியை விட்டு வெளியேறுவோம் - என்றும் கூறினர். (ஐ)

# பாத யாத்திரை குழுவினருக்கு சந்நிதியான் ஆச்சிரமம் உதவி



வடமராட்சி, மே 30
மாமாங்க பிள்ளையார் ஆலயத்தை சென்றடைந்த கதிர்காமம் பாதயாத்திரை குழுவினருக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் உதவிகள் வழங்கப்பட்டன.

வடமராட்சி - தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் இருந்து கடந்த முதலாம் திகதி ஆரம்பமான இந்த பாத யாத்திரை நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாமாங்க பிள்ளையாளர் ஆலயத்தை சென்றடைந்தது.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோகன தாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாக சென்று யாத்திரிகர்களுக்கு உதவிகளை வழங்கி வைத்தார். இது ஆச்சிரமத்தால் யாத்திரிகர்கள் குழுவுக்கு வழங்கப்பட்ட ஐந்தாவது கட்ட உதவி என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-02)

# கல்மடு மகா வித்தியாலயத்தில் கலை, கலாசார பெருவிழா!

வவுனியா, மே 30
கல்மடு மகா வித்தியாலய கலை, கலாசார மற்றும் பண் பாட்டு பெருவிழா நேற்று வியாழக்கிழமை பாடசாலை அதிபர் சு. முகுந்தன் தலைமையில் நடை பெற்றது.

இதன்போது பிரதம விருந்தினர்களுக்கு மாலை அணிவித்து பாரம்பரிய முறைப்படி விழா மேடைக்கு அழைத்து வரப்பட் டனர்.

இதைத் தொடர்ந்து, தமிழர் பாரம் பரிய விளையாட்டுக்களான கிறீஸ் மரம் ஏறுதல், தலையணை சண்டை உட்பட பல்வேறு விளையாட்டுகள் நடைபெற் றன. மாணவர்களுக்கு கைவிசேசமும் வழங்கப் பட்டதுடன் உற்பத்தி பொருட் சந்தையும் நடை பெற்றது.

இந்நிகழ்வில், வவுனியா பிரதேச செயலாளர் இ.பிரதாமன், வவுனியா வடக்கு கோட்டக் கல்வி அதிகாரி சசிகுமார் மற்றும் அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாண வர்கள், கிராம மக்கள் என பலர் கலந்து கொண் டனர். (ஐ-10)



# வவுனியாவில் நேற்றும் பல இடங்களில் மின் தடை!

வவுனியா, மே 30
வவுனியாவின் பல பகுதிகளிலும் அடிக்கடி இடம்பெறும் மின் தடையால் தாம் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் நேற்றைய தினமும் பல இடங்களில் மின் தடை ஏற்பட்டிருந்தது. இதனால் அரச அலுவலகங்கள், பாடசாலைகள், வங்கிகள், வர்த்தக நிலையங்கள் என மக்கள் சிரமங்களை எதிர்கொண்டனர்.

வவுனியா நகரம், கடை வீதி, கற்குழி, வைரவப்புளியங்குளம், பண்டாரிக்குளம், மன்னார் வீதி, உக்கிளான்குளம், இராசேந்திரங்குளம் உள்ளிட்ட மின் தடை காணப்பட்டது. எந்த முன்னறிவிப்புமின்றி மின் தடை ஏற்பட்டதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

எனவே, இது விடயத்தில் உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ஐ-10)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
30.05.2025 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், வைகாசி 16

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ்நாடு முதலமைச்சரின் அரசியல்

தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின், "மீனவர் பிரச்னை தீர வேண்டுமாயின் கச்சதீவை மீட்பதுதான் ஒரே வழி", என்று தெரிவித்திருக்கிறார். இதன்மூலம் தமிழ்நாட்டு மீனவர்களின் எல்லை தாண்டும் பிரச்னைக்கான தீர்வை முற்றிலும் இந்திய நடுவண் அரசாங்கத்தின் பக்கமாக திருப்பி விட முயற்சிக்கிறார். தமிழ்நாட்டின் அரசியல்வாதிகள் கச்சதீவை ஓர் உள்ளூர் அரசியல் முதலீடாகப் பயன்படுத்தி வருவது புதிய விடயமல்ல.

ஜெயலலிதாவின் காலத்தில் அவர் உச்சநீதிமன்றம் வரையில் சென்றார். இந்திய நடுவண் அரசு சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, "கச்சதீவு இரு தரப்பு உடன்பாட்டின் அடிப்படையில் இலங்கைக்கு வழங்கப்பட்ட ஒரு விடயம். அதனை மீளவும் இந்தியா பெற வேண்டுமாயின் யுத்தம்தான் செய்ய வேண்டும்", என்று வாதிட்டிருந்தார். மு. க. ஸ்டாலின் கச்சதீவை மீட்பதற்கு இந்திய மத்திய அரசை யுத்தம் செய்யுமாறு கூறுகிறாரா?

தமிழ்நாட்டு மீனவர்கள் எல்லை தாண்டுவதால்தான் இந்தப் பிரச்னை தொடர்ந்தும் ஒரு பேசுபொருளாக இருக்கிறது. ஆனால், இந்திய நடுவண் அரசு மீனவர் பிரச்னை தொடர்பில் தெளிவான பார்வையை கொண்டிருக்கிறது. குறிப்பாக, ஆளும் பாரதிய ஜனதா கட்சி அரசாங்கமானது மனிதநேய அடிப்படையிலான அணுகுமுறையை வலியுறுத்தி வருகிறது.

இதன் மூலம், இலங்கை கடற்படையின் மூலம் இந்த விடயத்தை கையாள முற்படுவது உசிதமான ஓர் அணுகுமுறையல்ல என்பதே இந்தியாவின் நிலைப்பாடாக இருக்கிறது. அண்மையில், இலங்கைக்கு வருகை தந்திருந்த இந்திய பிரதமர் நரேந்திர மோடி மீண்டும் தனது மனிதநேய அடிப்படையிலான அணுகுமுறையை வலியுறுத்தியிருந்தார்.

நிலைமை இவ்வாறிருக்கின்றபோது கச்சதீவை மீட்பதுதான் ஒரேயொரு வழியென்று தமிழ்நாட்டு முதலமைச்சர் கூறுவதன் ஊடாக தனது பொறுப்பை முற்றிலும் மறந்துவிடுகிறார் என்பதே பொருளாகும். இந்த விடயத்தில் தமிழ்நாட்டு அரசாங்கத்துக்கு முதன்மையான பொறுப்பு உண்டு. அதாவது, தமிழ்நாட்டு மீனவர்கள் தடைசெய்யப்பட்ட சுருக்கு வலைகளை பயன்படுத்தி வடக்கு மாகாண மீனவர்களின் மீன்பிடி எல்லைக்குள் நுழைவதன் காரணமாகவே பிரச்னை ஏற்படுகிறது.

தமிழ்நாட்டு மீனவர்களை, தமிழ்நாட்டு அரசாங்கம் கட்டுப்படுத்தினால் இந்தப் பிரச்னையை தீர்த்துவிடலாம். ஆனால், ஸ்டாலின் அதற்கான எந்தவோர் ஆக்கபூர்வமான முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. மாறாக, மத்திய அரசிடம் வலியுறுத்தும் ஒருவராகவே இருக்கிறார்.

சாதாரண மீனவர்களின் பிரச்னை போன்று வெளியில் காண்பிக்கப்பட்டாலும் இந்தப் பிரச்னையின் உண்மையான சூத்திரதாரிகள் தமிழ்நாட்டை சேர்ந்த கொள்ளை இலாபம் காணும் அவா கொண்டிருக்கும் பெரும் மீன்பிடி முதலாளிகளே. இவர்கள் அனைவருமே ஸ்டாலின் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு நெருக்கமானவர்கள். இதன் காரணமாகவே இவர்கள் பற்றி ஸ்டாலின் எதுவும் பேசுவதில்லை. இந்தப் பிரச்னையை திசைதிருப்புவதற்காக பயன்படுத்தும் துருப்புச்சீட்டாகவே கச்சதீவு விவகாரம் பயன்படுத்தப்படுகிறது. இது தொடர்பில், தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் மௌனம் காக்கக்கூடாது. தமிழ்நாடு ஈழ அரசியலுக்குத் தேவை என்னும் பழைய கதைகள் இனியும் பயன்படாது. தமிழ்நாட்டு அரசியல்வாதிகளுக்கு வடக்கிலிருந்து உறுதியான எதிர்வினைகள் ஆற்றப்பட வேண்டும்.

# பிரபாகரன், பொட்டு அம்மானை உயிருடன் மீட்பதற்கு அமெரிக்கா கப்பல் அனுப்பியது!

## விமல் வீரவன்ஸ வெளியிடும் தகவல்

கொழும்பு, மே. 30

இறுதிக் கட்டப்போரின் போது பிரபாகரன், பொட்டு அம்மான் உள்ளிட்டவர்களை அமெரிக்கா உயிருடன் கோரி இருந்தது. அதற்காக கப்பலொன்றுகூட அனுப்பி வைக்கப்பட்டிருந்தது என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

புலி டயஸ்போராக்களுடன் இந்த அரசாங்கத்துக்கு தொடர்பு இருக்கின்றது. தேர்தல் தொடர்பில் அவர்களுடன் கொடுக்கல், வாங்கல்கள்கூட இருந்திருக்கலாம். நிதி உதவிகூட கிடைக்கப்பெற்றிருக் கக்கூடும்.

கனடாவில் இனவழிப்பு நினைவகமொன்று அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு கடும் எதிர்ப்புகூட வெளியிடப்படவில்லை. இனவழிப்பு வாரம் அறிவிக்கப்பட்டது. முள்ளிவாய்க்கால் மற்றும் கொழும்பில்கூட இன



வழிப்பு நினைவு கூரப்படுகின்றது.

ஆனால் ஆட்சியாளர்கள் போர் வீரர்களுக்குரிய கௌரவத்தை வழங்கவில்லை. புலி டயஸ்போராக்களுக்கு மனம் வலிக்கும் என்பதால்தான் போர் வீரர்களைக்கூட சிப்பாயென ஆட்சியாளர்கள் விளித்துள்ளனர்.

போர்க்காலத்தில்கூட சர்வதேச அழுத்தங்கள் இருந்தன. அது இன்னும் தொடர்கின்றது.

இறுதிக் கட்டப்போரின் போது வடக்கு கடற்பரப்புக்கு அண்மித்து அமெரிக்காவின் மரைன் படையணியின் கப்பலொன்று வந்தது. சர்வதேச கடற்பரப்பில் அது நிறுத்தப்பட்டிருந்தது.

பொட்டு அம்மான், பிரபாகரன் உள்ளிட்டவர்களை உயிருடன் தம்மிடம் ஒப்படைக்குமாறு அவர்கள் கோரினார்கள். எதற்காக இது? இலங்கையை பிரிக்க வேண்டும் என்பதே அந்த சக்திகளின் நோக்கம். அந்த தேவைக்காகவே புலிகள் அமைப்பு செயற்பட்டது. சர்வதேச ரீதியிலும் வலுவடைந்தது - என்றார். (அ)

# போதைப்பொருளை சிறைக்குள் கொண்டு சென்ற அதிகாரி கைது

கொழும்பு, மே 30

கொழும்பு மகசின் சிறைச்சாலைக்குள் போதைப் பொருட்களை கொண்டு செல்ல முயன்ற சிறைச்சாலை அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொரளை பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் சிறைச்சாலைக்கு சென்றபோது சக அதிகாரிகளால் சோதனையிடப்பட்டார். இதன்போது, அவரிடமிருந்து 16 ஆயிரத்து 112 மில்லி கிராம் ஹெரோயின், 12 ஆயிரத்து 924 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள், 73 ஆயிரத்து 855 மில்லி கிராம் புகையிலை உள்ளிட்ட போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

இதையடுத்து, சந்தேகநபர் பொரளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். (ஐ)

# 10 மாணவர்களுக்கு மீண்டும் மறியல்!

கொழும்பு, மே 30

பகிடிவதையால் ஏற்பட்ட மன உளைச்சல் காரணமாக தவறான முடிவு எடுத்து உயிரிழந்த சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவன் தொடர்பில் கைது செய்யப்பட்ட 10 மாணவர்களை எதிர்வரும் ஜூன் 12 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு பலாங்கொடை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

10 மாணவர்களும் நேற்று வியாழக்கிழமை நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பபீடத்தைச் சேர்ந்த 23 வயதுடைய மாணவன் கடந்த ஏப்ரல் 29 ஆம் திகதி உயிரிழந்தமை தெரிந்ததே. (ஐ)

# 24 மணி நேரத்தில் கடவுச்சீட்டு வழங்கல் இன்றுடன் நிறைவு!

கொழும்பு, மே 30


கடந்த பெப்ரவரி 18ஆம் திகதி முதல் நடைமுறையில் உள்ள 24 மணி நேர ஒருநாள் கடவுச்சீட்டு வழங்கும் சேவை இன்று வெள்ளிக்கிழமையுடன் நிறைவடைகிறது என்று குடிவரவு - குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, ஜூன் 2 ஆம் திகதி முதல் ஒரு நாள் கடவுச்சீட்டு வழங்கும் சேவைக்கான விண்ணப்பங்கள், காலை 7:00 மணி முதல் பிற்பகல் 2:00 மணி வரை பத்தரமுல்லையில் உள்ள தலைமை பணிமனையில் ஏற்றுக் கொள்ளப்படும்.

முன்பதிவு செய்தல் அல்லது அவசர தேவைகள் உள்ள விண்ணப்பதாரர்களுக்கும் இந்த சேவையின் கீழ் வசதி செய்து கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வழக்கமான கடவுச்சீட்டு விண்ணப்பங்கள், தலைமை பணிமனை மற்றும் அனைத்து பிராந்திய பணிமனைகளில் வழக்கம் போல் காலை 7:00 மணி முதல் பிற்பகல் 2:00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு






**மேடம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். புது முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் அதிருப்தி அடைவார்கள்.

**மிதுனம்**
குடும்பத்தில் விட்டு கொடுத்து போவது நல்லது. உடல்நலத்தில் கவனம் தேவை. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் கனிவாக பழகுங்கள். மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும்.

**கடகம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். புது தொழில் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். சாதிக்கும் நாள்.

**சிம்மம்**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்களிடம் முக்கிய விஷயங்களை பகிர்ந்து கொள்வார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள்.

**கன்னி**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைத் தருவார்கள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில விஷயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். தொந்தரவுகள் வந்து நீங்கும். கவனம் தேவை.

**விருட்சிகம்**
சகோதரர் வகையில் ஒற்றுமை பிறக்கும். விலை உயர்ந்த ஆபரணம் கிடைக்கும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள்.

**தனுசு**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். உத்தியோகத்தில் சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

**மகரம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயல்படுவார்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**கும்பம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். புது வேலை கிடைக்கும். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும்.

**மீனம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். பேச்சில் முதிர்ச்சி தெரியும். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நினைத்ததை முடிப்பீர்கள்.

# சுன்னாகத்தில் பொலிஸார் சோதனை; போதைப்பொருட்களுடன் 7 பேர் கைது

யாழ்ப்பாணம், மே 30

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நேற்று முன்தினமும் நேற்றும் பொலிஸார் முன்னெடுத்த விசேட சோதனை நடவடிக்கைகளின்போது போதைப் பொருட்களுடன் 7 பேர் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

இவர்களில் மூவர் போதை மாத்திரைகளுடனும் இருவர் ஐஸ் போதைப்பொருளுடனும் இருவர் ஹெரோயின் போதைப் பொருளுடனும் கைது செய்யப் பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் 3 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர் ஏற்கனவே 8 கிராம் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்ட வழக்கும் நீதிமன்றத்தில் இடம்பெற்று வருகிறது என பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


(எ-05)

# யாழ். கோட்டையில் தமிழ், சிங்கள பரிமாற்றத் திட்டம் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், மே 30

யாழ்ப்பாணம் கோட்டையில் தமிழ், சிங்கள பரிமாற்ற செயல்திட்டம் யாழ். மாவட்ட தொல்லியல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் மாலை முன்னெடுக்கப்பட்டது.

கொழும்பு களனி பல்கலைக் கழகத்தில் தொல்லியல் துறையில் பட்டப்பின் படிப்பை தொடரும் மாணவர்களுக்காக இந்த செயல்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது தமிழர்களின் தொட்டுணரக்கூடிய மற்றும் தொட்டுணரமுடியாத மரபுரிமைகள், வழிபாட்டு முறைகள், உணவுப் பாரம்பரியங்கள், பாரம்பரிய விளையாட்டுக்கள், யாழ்ப்பாணம் கோட்டையின் வரலாற்று முக்கியத்துவம் என பல்வேறு விடயப்பரப்புகள் செய்முறை மற்றும் அறி



முறையூடாக முன்னெடுக்கப் பட்டது.

யாழ். பல்கலைக்கழகத்தின் கலாசார சுற்றுலாத்துறை மாணவர்கள், களனி பல்கலைக்கழக தொல்லியல்துறை பட்டப்பின் படிப்பு மாணவர்கள், யாழ். மாவட்ட தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளான கபிலன், மணிமாறன், மத்திய கலாசார நிதியத்தின் செயல் திட்ட முகாமையாளர் நாலக, தொல்லியல் திணைக்களத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(எ)

# பிரணதார்த்திஹரக் குருக்களின் நினைவு அஞ்சலிக்கூட்டம் நாளை

யாழ்ப்பாணம், மே 30

வலி. கிழக்கு சைவ சமய அருள்நெறி மன்றம் நடத்தும் மன்றத்தின் ஸ்தாபக தலைவர் வேதாகமகிரியாபானு சிவசிறீ இ. பிரணதார்த்திஹரக் குருக்களின் முதலாவது ஆண்டு நினைவு அஞ்சலிக்கூட்டம் கோப்பாய் சிறீ வீரபத்திரர் ஆலயப் பிரதான மண்டபத்தில் நாளை சனிக்கிழமை மாலை 04.00 மணிக்கு நடைபெறவுள்ளது. குருக்களின் வாழ்க்கையும் அவரது வழிகாட்டுதலும் பற்றிய கண்ணோட்டம் என்னும் தலைப்பில் சைவப்புலவர் கந்த. சத்தியதாசனும் நினைவஞ்சலி உரைகளை ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக துணைவேந்தர் சி. சிறீ சற்குணராசா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை முன்னாள் துறைத் தலைவர் கலாநிதி மா. வேதநாதன், வைத்திய கலாநிதி வை. தியாகராஜா, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மா. அனந்தலெச்சுமி ஆகியோர் நிகழ்த்துவர். நினைவுப் பேருரை சிவப்பிரம்மசிறீ தியாக. மயூரகிரி குருக்கள் "ஈழத்து அந்தணர் வாழ்வியல் சமகாலநோக்கு" என்னும் விடயப்பொருளில் உரையாற்றவுள்ளார்.

(எ)

# முல்லை. மீனவர்களுக்கு மனிதாபிமான உதவி

முல்லைத்தீவு, மே 30

முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களுக்கு இந்திய அரசாங்கத்தினதும் இந்திய மக்களினதும் "மனிதாபிமான உதவிகள்"வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மாவட்ட செயலாளர் அ. உமாமகேஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதில், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செ. திலகநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். இதன்போது, 30 மீனவர்களுக்கும்




முல்லைத்தீவு மாவட்ட சமாசங்களின் சங்கத்தினருக்கும் மீன்பிடி உபகரணங்கள் மற்றும் குளிர்சாதனப்பெட்டிகள் வழங்கப்பட்டன.

(எ)

# ஞானச்சுடர் மலர் வெளியீடும் ஆச்சிரம வாராந்த நிகழ்வும்

யாழ்ப்பாணம், மே 30

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகளின் தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை காலை 10. 30 மணிக்கு ஞானச்சுடர் வைகாசி மாத (329 ஆவது) மலர் வெளியீட்டு நிகழ்வு நடைபெறவுள்ளது.

இளைப்பாறிய கிராம உத்தியோகத்தர் செ. ஞானசபேசன் வெளியீட்டுரையை நிகழ்த்துவார். மதிப்பீட்டுரையை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் துரை. கணேசமூர்த்தி நிகழ்த்துவார்.

அதனைத் தொடர்ந்து சிறப்புப் பிரதிகளும் உதவித் திட்டங்களும் வழங்கப்படவுள்ளன.

(எ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவில் கெஹலியவின் மகள் முன்னிலை

கொழும்பு, மே. 30

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் மகள் அமாலி ரம்புக்வெல இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் நேற்று வியாழக்கிழமை முன்னிலையானார்.

வாக்குமூலம் வழங்குவதற்காகவே அமாலி ரம்புக்வெல இவ்வாறு இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையானார்.

இந்நிலையில், அமாலி ரம்புக்வெல வாக்குமூலம் வழங்கிய பின்னர் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவிலிருந்து வெளியேறியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மற்றும் அவரது மகன் ரமித் ரம்புக்வெல ஆகியோர் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நாட்டிலிருந்து வடக்கு பகுதி பிரித்து வழங்கப்பட்டுள்ளதா?

## பொதுஜன பெரமுன கேள்வி



கொழும்பு, மே. 30

**அதிகாரப் பரவலாக்கல் ஊடாக நாட்டிலிருந்து வடக்குப் பகுதி பிரித்து வழங்கப்பட்டுள்ளதா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர தெரிவித்தார்.பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-வடக்கில் காணி உரித்து தொடர்பில் அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட வர்த்தமானி மீளப்பெற் றுக்கொள்ளப்பட்டமை தனக்கு மகிழ்ச்சி அளிப்பதாக தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

காணி உரித்துடையவர்களுக்கு அவற்றை பெற்றுக்கொடுக்கும் நோக்கிலேயே இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இது புதிய விடயமல்ல.

தெற்கிலும் இவ்வாறு வர்த்தமானி வெளியிடப்பட்டு காணி உரித்துகள் வழங்கப்பட்டுள்ளன.

வடக்கில் இயங்கும் பிரிவினைவாதிகள் இனவாதத்துடன் செயற்படுகின்றனர். அவர்களை மகிழ்ச்சிப்படுத்தும் நோக்கில் அரசாங்கம் செயற்படுகின்றமையானது அதிகாரப் பரவாலாக்கல் ஊடாக வடக்கு பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளதா என்ற சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது.

மேலும், தையிட்டி விகாரையில் இராணுவத்தினர் வழிபாடு செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. தமிழ் பிரிவினைவாதிகள் ஒரிருவர் மேற்கொண்ட ஆர்ப்பாட்டமே இதற்குக் காரணமாகும்.

இராணுவத்தினர் தமது மத வழிபாடுகளில் ஈடுபடக் கூடிய சுதந்திரம் இருக்கிறது. அதனை உறுதிப்படுத்துவதற்காக நாம் கடந்த காலங்களில் பாதுகாப்பு துறைசார் மேற்பார்வைக் குழுவின் ஊடாக பாராளுமன்றத்தில் கலந்துரையாடியிருக்கிறோம்.

ஆனால் தற்போதைய அரசாங்கம் தமிழ் பிரிவினைவாதிகளுக்கு ஆதரவாகவே செயற்படுகிறது-என்றார். (அ)

# புகைத்தலால் இலங்கையில் ஆண்டுக்கு 20,000 பேர் பலி!



கொழும்பு, மே. 30

புகைத்தலால் இலங்கையில் ஆண்டுக்கு 20,000 பேர் உயிரிழக்கின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச புகைத்தல் தடுப்பு தினம் மே மாதம் 31 ஆம் திகதியாகும்.

இந்த தினத்தை முன்னிட்டு "புகையிலைத் துறையின் தலையீடுகளை வெளிக்கொணருவோம்" எனும் தொனிப்பொருளில் ஊடகவியலாளர் சந்திப்பொன்று தேசிய நூலக ஆவண வாக்கல் சேவைகள் சபையில் நடைபெற்றது.

இந்த தொனிப்பொருள், இளைஞர்களை இலக்கு வைத்து செயல்படும் புகையிலை நிறுவனங்களின் சூட்சுமமான விளம்பரங்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

புகைத்தலால் இலங்கையில் ஆண்டுக்கு 20,000 பேர் உயிரிழக்கின்றனர்.

இவை ஒரு நாட் டின் சுகாதாரத்துக்கு பாரிய அச்சுறுத்தலாக அமைகின்றது என மதுசாரம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

நாளாந்தம் 520 மில்லியன் ரூபாய், புகையிலை பொருட்களுக்காக செலவிடப்படுகின்றது என மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# பிரதமர் பதவியில் மாற்றம் இல்லை!



கொழும்பு, மே. 30

அமைச்சரவை மாற்றம் அல்லது பிரதமர் மாற்றம் குறித்த ஊகங்களை அமைச்சர் கே.டி. லால்காந்த நிராகரித்துள்ளார்.

அத்தகைய கூற்றுக்கள் ஆதாரமற்றவை என்றும், அது போன்ற தகவல்களை பரப்புபவர்களின் மூளைகள் பரிசோதிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

செய்தியாளர்களிடம் இது குறித்து கருத்துரைத்த அவர், எதிர்க்கட்சிகள் தொடர்ந்து தவறான தகவல்களைப் பரப்பி வருவதாக குறிப்பிட்டார்.

அத்துடன், அரசாங்கத்துக்குள் எந்த உள்ளக மோதல்களும் இல்லை என்றும் வலியுறுத்தினார்.

தேசிய மக்கள் கட்சியின் விரிவாக்கம் முடிந்து, கொழும்பு மாநகராட்சியின் கட்டுப்பாட்டை அது பெற்றுள்ளது.

இதன்படி தேசிய மக்கள் சக்தியின் வ்ரே கெலி பால்தசார் ஏற்கனவே மாநகர முதல்வராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

அதனை அதிகாரபூர்வமாக்குவது மட்டுமே தற்போது எஞ்சியுள்ளதாக லால் காந்த தெரிவித்துள்ளார். (அ)

# இணையவழித் தாக்குதலால் எவ்வித தரவுச் சேதமுமில்லை

## ஓய்வூதியத் திணைக்களம்

கொழும்பு, மே. 30

ஓய்வூதியத் திணைக்களத்தின் தரவுத்தளக் கட்டமைப்பை இலக்குவைத்து நடத்தப்பட்ட இணையவழித் தாக்குதலில் எவ்விதமான தரவுச் சேதமும் ஏற்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

உத்தியோகபூர்வ அறிக்கை ஒன்றை வெளியிட்டு இந்த விடயத்தைத் தெரிவித்துள்ள ஓய்வூதிய திணைக்களம், இணையவழித் தாக்குதல் நடத்தப்பட்ட போதிலும், திணைக்களத்தின் செயற்பாடுகள் பாதிக்கப்ப டவில்லை என குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, ஓய்வூதிய திணைக்களத்தின் தரவு அமைப்பு வழமைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாக இலங்கை கணினி அவசர தயார்நிலை குழுவின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருக தமுனுபொல தெரிவித்துள்ளார். (அ)

# குவைத்திலிருந்து 30 இலங்கையர் நேற்று நாடு கடத்தப்பட்டனர்

கொழும்பு, மே. 30


விஸா இன்றி சட்டவிரோதமாக குவைத்தில் தங்கியிருந்த 30 இலங்கையர்கள் நேற்று வியாழக்கிழமை நாடு கடத்தப்பட்டனர்.

30 இலங்கையர்களும் நேற்று அதிகாலை 04.30 மணியளவில் குவைத்திலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இவர்கள் விஸா இன்றி சட்டவிரோதமாக குவைத்தில் தங்கியிருந்து பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு வந்துள்ள நிலையில், அந்நாட்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தடுப்பு காவலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

நாடு கடத்தப்பட்டவர்களை தங்களது சொந்த ஊருக்கு அனுப்பி வைக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மேற்கொண்டுள்ளது. (அ)

# தொண்டமானின் ஜனன தினம் கொட்டகலையில் அனுஷ்டிப்பு



கொழும்பு, மே. 30

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் தலைவரும், அமைச்சருமான அமரர் ஆறுமுகன் தொண்டமானின் 61 ஆவது ஜனன தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

கொட்டகலை சி.எல்.எப் ஆறுபடை தாயுமான சிவன் ஆலய வளாகத்தில் விசேட பூசை வழிபாடுகளுடன் அன்னாரின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து ஜனன தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதேவேளை இ.தொ.கா தலைமை காரியாலயம் கொழும்பு சௌமியபவனிலும் விசேட பூசை வளிபாடுகளும் இடம்பெற்றிருந்தது.

இந்தப் பூசை வழிபாட்டில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாள ரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், தலைவர் செந்தில் தொண்டமான், தவிசாளரும், நிதிச்செயலாள ருமான மருதப்பாண்டி ராமேஸ்வரன், அமரர் ஆறுமுகன் தொண்டமானின் பாரியார் ராஜலஷ்சுமி தொண் டமான், உட்பட இ.தொ.கா உயர்பீட உறுப்பினர்கள், புதி தாக தெரிவுசெய்யப்பட்ட உள் ளூராட்சி சபை உறுப்பினர்கள், மாவட்ட தலைவர், தலைவிமார்கள் என பலர் கலந்துக் கொண்டனர். (அ)

# நுவரெலியாவில் சீரற்ற காலநிலை மக்களின் இயல்பு வாழ்வு பாதிப்பு!

கொழும்பு, மே. 30

நிலவும் சீரற்ற வானிலையால் நுவரெலியா மாவட்டத்தில் 71 குடும்பங்களைச் சேர்ந்த 246 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


நேற்று காலை வேளையில், நுவரெலியா - பதுளை, நுவரெலியா - கண்டி மற்றும் நுவரெலியா - ஹற்றன் பிரதான வீதியில் ப்ளக்பூல் சந்தி, வெண்டிகோனர், நானுஓயா, ரதல்ல குறுக்கு வீதி போன்ற இடங்களில் அதிகளவான பனி மூட்டம் காணப்பட்டது.

இதனால் வாகனச் சாரதிகள் மிகுந்த அவதானத்துடன் வாகனங்களைச் செலுத்துமாறும், வாகனங்களின் முகப்பு விளக்குகளை ஒளிரச் செய்யுமாறும் போக்குவரத்து பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

அத்துடன், நோட்டன் பிரிஜ் பகுதியில் வீசிய பலத்த காற்றினால் மின்கம்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் குறித்த பகுதியில் மின்சாரம் தடைப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துமிந்தவுக்கு ஜூன் 5 வரை விளக்கமறியல்



கொழும்பு, மே. 30

முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவை எதிர்வரும் ஜூன் மாதம் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வெள்ளவத்தை-ஹெவ்லொக் சிற்றி தொடர்மாடி குடியிருப்பில் தங்க முலாம் பூசப்பட்ட ரி-56 ரக துப்பாக்கியொன்று மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கடந்த வெள்ளிக்கிழமை முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க கைது செய்யப்பட்டார்.

இந்த சம்பவம் தொடர்பிலான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

# இலங்கைப் பொருளாதாரம் சீராக 3 ஆண்டுகள் செல்லும்!

## மத்திய வங்கி சுட்டிக்காட்டு

கொழும்பு, மே. 30

**இலங்கையின் பொருளாதாரம் 2018ஆம் ஆண்டு காலப் பகுதியில் காணப்பட்ட நிலைக்குத் திரும்புவதற்கு மேலும் 3 ஆண்டுகள் செல்லும் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.**

இலங்கையின் பொருளாதாரம் என்ற கருப்பொருளின் அடிப்படையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்துரைத்த இலங்கை மத்திய வங்கியின் மேலதிக ஆளுநர் சந்திரநாத் அமரசேகர இதனைக் குறிப்பிட்டார்.

2021ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், கடந்த 2024ஆம் ஆண்டு வாழ்க்கைச் செலவு இரு மடங்காக அதிகரித்துள்ளதென அவர் தெரிவித்தார்.

எனினும் 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் சிறிய அளவிலான வேறுபாடு காணப்படுகிறது. வெவ்வேறு காரணங்களால் பொருளாதாரம் மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டது.



தற்போது பணவீக்கம் வீழ்ச்சியடைந்துள்ளமையின் பயன், மக்களைச் சென்றடைகிறது.

எனினும் 2021ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மக்களின் வாழ்க்கைச் செலவு தொடர்ந்தும் அதிகமாகவே உள்ளதென்பது தெரியவருகின்றது என, இலங்கை மத்திய வங்கியின் மேலதிக ஆளுநர் சந்திரநாத் அமரசேகர குறிப்பிட்டார். (அ)

# கற்பனைக் கதைகளினால் அரசுக்கு பெரும் நெருக்கடி

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு



கொழும்பு, மே. 30

தேர்தல் காலங்களில் கூறப்பட்ட கற்பனைக் கதைகளால் அரசாங்கம் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரித ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க சிறந்த பேச்சாளர். அவரது பேச்சிலேயே மக்கள் ஏமாற்றமடைந்தனர்.

அவரும் ஆளும் தரப்பை சேர்ந்தோரும் முன்வைத்த கற்பனைக் கதைகளால் அரசாங்கம் நெருக்கடி நிலைமையை எதிர்நோக்கியுள்ளது. அமைச்சரவையில் மாற்றங்களை ஏற்படுத்த தயாராகி வருவதாகவும் தெரிகிறது.

அதேபோன்று பிரதமர் பதவியிலும் மாற்றம் ஏற்படுத்தக்கூடும் எனக் கூறப்படுகிறது.

நாட்டின் பொருளாதாரத்தை சிறந்த முறையில் கொண்டு செல்லக்கூடிய குழு தேசிய மக்கள் சக்தியிலேயே இருப்பதாகக் கூறினார்கள்.

ஆனால் இன்று ஏதேனும் ஒரு காத்திரமான திட்டமிடல் முன்னெடுக்கப்பட்டிருக்கிறதா?

ரணிலின் பாதையிலிருந்து ஓர் அங்குலமேனும் பிசகாமல் அரசாங்கம் பயணித்துக்கொண்டிருக்கிறது.

அரசாங்கம் தற்போது எதிர்நோக்கியிருக்கும் நெருக்கடி நிலைமை நாட்டை பாதிப்புறச் செய்யலாம்.

இந்த நிலைமை ஏற்படும் என்பதை நாம் ஏற்க னவே தெரிவித்திருந்தோம்.-என்றார். (அ)

# ஒருங்கிணைப்பு குழுத் தலைவர்கள் ஜனாதிபதியுடன் கலந்துரையாடல்

கொழும்பு, மே. 30

2026 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்துக்கான பரிந்துரைகள் மற்றும் முன்மொழிவுகளை பெற்றுக்கொள்வது தொடர்பாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலை வர்கள் மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கிடையிலான கலந்துரையாடல் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தை தயாரிக்கும்போது மாவட்ட மட்டத்தில் மக்களின் அடிப்படை மற்றும் அவசரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டியதன் அவசியத்தை இதன்போது ஜனாதிபதி வலியுறுத்தினார்.

மாவட்ட அளவில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் மக்களின் ஏனைய அவசர அபிவிருத்தித் தேவைகள் தொடர்பில் இனங்கண்டு,

அத்திட்டங்களை எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்கள், ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமநாயக்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரஸல் அபோன்சு, அரச நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஈ. ஏ. ரத்னசீல, தேசிய வரவு -செலவுத் திட்டத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் நாயகம் எம். அனோமா நந்தனி மற்றும் நிதி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். (அ)

# கொத்தலாவல மருத்துவ பட்டப்படிப்பை நிறுத்த முடிவு செய்தமை பெரும் தவறு!

## சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டு

கொழும்பு, மே. 30

ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் மருத்துவ பட்டப்படிப்பை நிறுத்த அரசாங்கம் முடிவு செய்துள்ளமை பாரியதொரு தவறு என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இந்த மருத்துவப் பட்டப்படிப்பு இலங்கை மருத்துவச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட, ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கற்கை நெறியாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.


கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்துக்கு உள்நாட்டு மாணவர்களைச் சேர்ப்பதை நிறுத்த அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து விசேட அறிவிப்பொன்றை விடுத்து அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-இந்த மருத்துவப் படிப்பினால் நாட்டுக்கு அமெரிக்க டொலர்கள் ஈட்டப்படுகின்றன. நாட்டில் உள்ள மருத்துவ மாணவர்கள் இந்தப் பட்டப்படிப்பைத் தொடரும் வாய்ப்பை இழப்பதன் மூலம் பாதகமான பல விடயங்கள் நடக்கும்.

இந்தப் பட்டப்படிப்பைத் தொடர விரும்பும் மாணவர்கள் சுமார் 139 இலட்சம் ரூபாவை செலவிடுகின்றனர். இதை நிறுத்துவதன் மூலம், 400 முதல் 500 இலட்சம் ரூபாய் வரை வெளிநாடுகளில் செலவிட்டு பட்டம் பெறவேண்டிய நிலை ஏற்படும்.

இதற்கான செலவுகள் டொலர்களில் நடப்பதால், நாட்டில் தக்கவைக்கக்கூடிய டொலர்களின் அளவும் இழக்கப்படுகிறது.

இந்த மருத்துவப் படிப்பைப் கற்கும் பெரும்பாலான மாணவர்களுக்குக் கிழக்கு,



சப்ரகமுவ, ஊவா போன்ற பல்கலைக்கழகங்களில் இலவசக் கல்வியின் கீழ் மருத்துவப் பட்டங்களைப் படிக்க வாய்ப்பு இருந்தாலும், அவர்கள் தொலைதூரத்தில் இருப்பதால் கொத்தலாவல பல்கலைக்கழகத்தை நாடுகின்றனர்.

இதன் விளைவாக, குறித்த பல்கலைக்கழகங்களில் மேலதிக மாணவர்களுக்கும் பல்கலைக்கழக வாய்ப்புகள் கிட்டுகின்றன.

கொத்தலாவல மருத்துவ பீடம் மூடப்படுவதால் மாணவர்களின் இலவசக் கல்விக்கான பல வாய்ப்புகளும் இழக்கப்படும்-என்றார். (அ)

# விமான பணிப்பெண்ணை பாலியல் ரீதியாக துன்புறுத்திய யாழ்ப்பாண வாசி கைதானார்!

கொழும்பு, மே. 30

கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த எமிரேட்ஸ் ஏயார்லைன்ஸ் விமானத்தின் பணிப்பெண்ணை பாலியல் ரீதியாக துன்புறுத்திய குற்றச்சாட்டில் இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

39 வயதான தென்னாப்பிரிக்கப் பெண்ணை பாலியல் ரீதியாக துன்புறுத்திய நபர், கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்திறங்கியதும் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

49 வயதான சந்தேக நபர் யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

நேற்று முன் தினம் டுபாயிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்துக்குப் பயணித்த விமானத்தில் சந்தேக நபர் அதிக மதுபோதையில் இருந்ததாகவும், விமானப் பணிப்பெண்ணை பாலியல் ரீதியாக துன்புறுத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து விமானப் பணிப்பெண் உடனடியாக விமானிக்குத் தகவல் தெரிவித்தார்.

அதன் பின்னர் சந்தேகநபரான பயணி கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்ததும் விமான நிலையப் பாதுகாப்பு அதிகாரிகளின் உதவியுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

குறித்த பயணி நீர்கொழும்பு தடயவியல் மருத்துவப் பரிசோதகரிடம் முன்னிலைப்படுத்தப்பட்டபோது, அவர் மதுபோதையில் இருந்தது உறுதி செய்யப்பட்டது.

சந்தேக நபர் கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார். (அ)

# மறு அறிவிப்பு வரும் வரை கடலுக்கு செல்லவேண்டாம்

கொழும்பு, மே. 30

பலத்த காற்று மற்றும் கடல் கொந்தளிப்பு தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது.

இந்த எச்சரிக்கையானது இன்று பிற்பகல் 12.30 மணி வரை அமுலில் இருக்குமென வும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய,

சிலாபம் முதல் புத்தளம் வரையிலும், மன்னார் முதல் காங்கேசன் துறை வரையிலும், காலி முதல் அம்பாந்தோட்டை வழியாக பொத்துவில் வரையிலும் உள்ள கரையோர கடற்பகுதிகளுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட் டுள்ளது.

குறித்த பகுதிகளில் உள்ள பொதுமக்கள் இது தொடர்பில் மிகவும் எச்சரிக்கையாக இருக்குமாறும் வளிமண்ட லவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

அதன்படி,

மறு அறிவிப்பு வரும் வரை கடற்பகுதிகளுக்கு பயணம் செய்ய வேண்டாம் என்று மீன்பிடி மற்றும் கடல் சார் சமூகத்தினருக்கு வளிமண் டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளும்வரை காத்திருக்கமாட்டோம்!

## அமைச்சர் சுனில் ஹந்துனெத்தி



கொழும்பு, மே. 30

**"ஆட்சியை முன்னெடுக்க எமக்கு முடியாவிட்டால் மக்கள் கழுத்தை பிடித்து வெளியே தள்ளும்வரை காத்திருக்கமாட்டோம். தாமாகவே விலகிச் சென்றுவிடுவோம். ஆனால் அவ்வாறானதொரு நிலை ஏற்படாது. ஏனெனில் மக்களுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவருகின்றோம்."**

-இவ்வாறு அமைச்சர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

சில வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு நியாயமான காலம் அவசியம். அக்காலப்பகுதிக்குள் பொருளாதாரம், அரசியல், சமூகம், கல்வி, ஊழல் ஒழிப்பு என்பன தொடர்பில் உருவாக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்களை செயற்படுத்த தவறினால் மக்கள் எம்மை நீக்கலாம். அதற்குரிய தார்மீக உரிமை மக்களுக்கு உள்ளது.

ஆனால் எமக்கு முடியாவிட்டால் மக்கள் விரட்டும் வரை காத்திருக்கமாட்டோம். தாமாகவே சென்றுவிடுவோம். பதவிகளை இறுகப் பிடித்துக்கொண்டிருக்கவேண்டிய தேவைப்பாடு எமக்கு கிடையாது. பதவி ஆசையில் அதிகாரத்தைப் பிடித்தவர்கள் நாம் அல்லர். பல தியாகங்கள், வலிகளுக்கு மத்தியிலேயே ஆட்சிக்கு வந்துள்ளோம். எனவே, மக்கள் கல்லடித்து விரட்டும்வரை காத்திருக்கமாட்டோம்.

எமக்கு முடியாது என்பது மக்களுக்கு முன்னர் எமக்கு உணரக்கூடியதாக இருக்க வேண்டும். அப்படியான நிலையை நாம் உணரவில்லை. அப்படியான நிலைவராது. மக்களுக்காக திருப்தியுடன் செயற்படுகின்றோம். திட்டங்களைஉ ருவாக்கி வருகின்றோம். எமது உறுப்பினர்கள் கற்றுக்கொண்டே வேலை செய்கின்றனர். புதியவர்களாக இருந்தாலும் அனுபவங்களைப் பெற்று சேவையாற்றுவதில் தீவிரம் காட்டிவருகின்றனர்-என்றார். (அ)

# தபால், தொலைத்தொடர்பு பணியாளர்கள் போராட்டம்!

கொழும்பு, மே. 30

15 கோரிக்கைகளை முன்வைத்து, தபால் மற்றும் தொலைத்தொடர்பு அதிகாரிகள் சங்கம் நேற்று முன் தினம் பிற்பகல் முதல் இரண்டு நாள் நாடளாவிய வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இந்நிலையில் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவிடம் கையளிக்க திட்டமிட்டுள்ளதாக தபால் மற்றும் தொலைத்தொடர்பு அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, மேலதிக நேர கொடுப்பனவு தொடர்பாக எழுந்துள்ள பிரச்னையை முன்னிறுத்தி, சிவில் விமான சேவை தொழில்முறை ஊழியர் சங்கம் நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

அதன்படி, சிவில் விமான சேவை தொழில்முறை ஊழியர் சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களும் மேலதிக நேர சேவைகளிலிருந்து விலகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக நேர கொடுப்பனவு பிரச்னைக்கு தீர்வு காணப்படும் வரை இந்த தொழிற்சங்க நடவடிக்கை தொடரும் என்று அந்த சங்கம் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 2,800 மெற்றிக் தொன் உப்பு சந்தையில்!

கொழும்பு, மே. 30

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 2,800 மெற்றிக் தொன் உப்பு சந்தைக்கு வெளியிடப்பட்டுள்ளதாக தேசிய உப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

உணவுக்காக இறக்குமதி செய்யப்பட்ட இந்த உப்பு கடந்த 23 ஆம் திகதி நாட்டுக்கு வந்ததாகவும், உள்ளூர் உப்பு விற்பனை முகவர்கள் மூலம் சந்தைக்கு விடுவித்து நுகர்வோருக்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தேசிய உப்பு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை உப்பு நிறுவனம் 10,000 மெற்றிக் தொன் உப்பை இறக்குமதி செய்து வருவதாகவும், புறக்கோட்டை இறக்குமதியாளர்கள் உட்பட 100க்கும் மேற்பட்ட இறக்குமதியாளர்கள் மேலும் 100,000 மெற்றிக் தொன் உப்பை இறக்குமதி செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# வாகன விற்பனை மோசடி 29 வயது இளைஞர் கைது!



கொழும்பு, மே. 30

விற்பனைக்கு உள்ள வாகனங்களின் விளம்பரங்களை சமூக ஊடகங்களில் வெளியிட்டு பண மோசடி செய்த குற்றச்சாட்டுக்காக ஹல்துமுல்ல பகுதியில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

பலாங்கொடை நகரில் உள்ள ஹல்துமுல்ல பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவினால் நேற்றுமுன் தினம் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

இந்த சந்தேக நபர் தன்னிடம் ஓட்டோக்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு இருப்பதாக சமூக ஊடகங்களில் விளம்பரங்களை வெளியிட்டு, பின்னர் தனது வங்கிக் கணக்கில் முன்பணத்தைப் பெற்று மோசடி செய்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

நிதி மோசடி தொடர்பாக அளிக்கப்பட்ட முறைப்பாட்டின் பேரில் தொடங்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சந்தேக நபர் பலாங்கொடையைச் சேர்ந்த 29 வயதுடையவர்.

ஹல்துமுல்ல, சமனலவேவ, கேகாலை மற்றும் கண்டி போன்ற பல்வேறு பகுதிகளில் தனிநபர்களிடம் சுமார் 200,000 ரூபாய் மோசடி செய்துள்ளதாக விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது. (அ)

# பாணந்துறையில் துப்பாக்கிச் சூடு!

கொழும்பு, மே. 30

களுத்துறை, பாணந்துறை, வேகட பகுதியில் உள்ள மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் விற்பனை நிலையம் ஒன்றில் நேற்று முற்பகல் 10 மணியளவில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று பதிவாகி யுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இருவர் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

இதனால், சம்பவ இடத்தில் இருந்த ஒரு தொழிலாளி துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

அவர் தற்சமயம், பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான விசாரணையை பாணந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# வட்ஸ்ஆப் குழுவில் கருத்து மோதல் துப்பாக்கி காட்டி மிரட்டியவர் கைது!

கொழும்பு, மே. 30

நண்பர்கள் இடையேயான கருத்து மோதல் காரணமாக துப்பாக்கியைக் காட்டி அச்சுறுத்திய சம்பவமொன்று நீர்கொழும்பு தலாதுவ பகுதியில் நேற்று முன்தினம் பதிவானது.

வட்ஸ்அப் குழுவில் ஏற்பட்ட கருத்து மோதலே இந்த சம்பவத்திற்குக் காரணம் என பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கியை வைத்திருந்த நபர் ஒருவர், வானை நோக்கித் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

எனினும் இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

ஒரே பாடசாலையில் கல்வி கற்ற 53 வயதான இரு நண்பர்கள் இடையே இந்த கருத்து மோதல் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை துப்பாக்கியை வைத்திருந்த நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# இலங்கை-பூட்டான் இடையே இரு தரப்பு அரசியல் கூட்டம்

கொழும்பு, மே. 30

வெளியுறவுச் செயலாளர்கள் தலைமையிலான இலங்கைக்கும் பூட்டானுக்கும் இடையிலான இரு தரப்பு அரசியல் ஆலோசனைகளின் இரண்டாவது அமர்வின் உரையாடல்கள், திம்புவில் இடம்பெற்றிருந்தது.

பூட்டானுக்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ள இலங்கையின் வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளர் அருணி ரணராஜா, பூட்டான் வெளியுறவுச் செயலாளர் பெமா சோடனுடன் இருதரப்பு உரையாடலின் இரண்டாவது அமர்வுக்கு இணை தலைமை தாங்கினார். இவ்வாலோசனைகளின் முதல் அமர்வு நவம்பர் 2015 இல் கொழும்பில் நடைபெற்றது.

திம்புவில் செவ்வாய்க்கிழமையன்று நடைபெற்ற இக்கலந்துரையாடல்கள், கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி, இடைத்தொடர்பு, வர்த்தகம் மற்றும் முதலீடு, காலநிலை மாற்றம், சுற்றுலா, கலாச்சாரம் மற்றும் மக்களிடையேயான ஈடுபாடு உள்ளிட்ட பரஸ்பர ஆர்வமுள்ள பல்வேறு துறைகளை உள்ளடக்கியிருந்தன.

இரு தரப்பினரும் தற்போதுள்ள ஒத்துழைப்பின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்ததுடன், இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிகளை ஆராய்ந்தனர். இரு நாடுகளும் அங்கத்துவம் வகிக்கும் பிராந்திய மற்றும் பல்தரப்பு மன்றங்களின் தற்போதைய முன்னேற்றங்கள் குறித்த கலந்துரையாடல்களும் இவ்வாலோசனைகளில் அடங்குகின்றன. (அ)

சப்ரகமுவ பல்கலை மாணவன் மரணம்

# அடிப்படை மனித உரிமை மீறல் என தீர்ப்பு வழங்க கோரி மனுத்தாக்கல்!

கொழும்பு, மே. 30

சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவன் மரணித்த சம்பவம் தொடர்பாக அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகத் தீர்ப்பு வழங்கக் கோரியும், விரிவான விசாரணை நடத்துமாறு பிரதிவாதிகளுக்கு உத்தரவிடக் கோரியும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளது.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தில் இரண்டாம் ஆண்டில் கல்வி பயின்ற சரித் தில்ஷான் தயானந்த பகிடிவதையின் காரணமாக உயிரை மாய்த்துக்கொண்டார்.

பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் பகிடிவதைகளை நீக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவு வழங்குமாறும் குறித்த மனுவில் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி ரஜீவ அமரசூரிய, அதன் செயலாளர் சரித் கல்ஹேன ஆகியோரால் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேலும் 1998 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க பகிடிவதை ஒழிப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு பிரதிவாதிகளுக்கு உத்தரவிடக்கோரியும் சட்டத்தரணிகள் சங்கம் நீதிமன்றத்தை கேட்டுள்ளது.

இந்த வழக்கில் சப்ரகமுவ பல்கலைக்கழகம், அதன் உபவேந்தர் உள்ளிட்ட நிர்வாகத்தினர், உயர்கல்வி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்கள், பொலிஸ்மா அதிபர், பதில் காவல்துறைமா அதிபர், குற்றப் புலனாய்வு திணைக்கள பொறுப்பதிகாரி, சட்டமா அதிபர் உள்ளிட்ட 69 பேர் பிரதிவாதிகளாகப் பெயரிடப் பட்டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் 5 மாதங்களில் விபத்துகளால் 32 பேர் மரணம்

## போக்குவரத்து பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரம்

மட்டக்களப்பு, மே 30

**மட்டக்களப்பு மாவட்டத்தில் நடப்பு ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் இடம்பெற்ற 215 வீதி விபத்துக்களில் 32 பேர் உயிரிழந்ததாக கிழக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் வர்ண ஜெயசுந்தர தெரிவித்தார்.**

மட்டக்களப்பு மாவட்ட வீதி பாதுகாப்பு குழுக் கூட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலய மாநாட்டு மண்டபத்தில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜி. லலித் லீலாரத்தின தலைமையில் நடைபெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 2024 ஜனவரி முதலாம் திகதி முதல் டிசெம்பர் 31 வரை 611 வீதி விபத்துக்கள் பதிவாகின. இந்தக் காலப்பகுதியில் 72 பேர் உயிரிழந்தனர். இந்த வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் மே 25 ஆம் திகதி வரை 215 விபத்துக்களில் 32 பேர் உயிரிழந்தனர்.

விபத்துக்களுக்கு முதன்மையான காரணமாக வேகமாக வாகனங்களை செலுத்துவது மற்றும் மதுபோதையில் வாகனம் ஓட்டுவது குறிப்பிடப்படுகின்றது. குறிப்பாக, களுவாஞ்சிக்குடி, காத்தான்குடி, மட்டக்களப்பு நகரம், ஏறாவூர், சந்திவெளி, வாழைச்சேனை மற்றும் ஓட்டமாவடி போன்ற பிரதேசங்களில் விபத்துக்கள் அதிகரித்துள்ளன.

மோட்டார் சைக்கிளில் தலைக்கவசம் இன்றி, மூன்று பேர் பயணம் செய்வது போக்குவரத்து சட்டத்துக்கு எதிரானது. தலைக்கவசம் அணியாதவர்களுக்கு எதிராக 7 நாட்கள் கால அவகாசம் வழங்குமாறும் இதன் பின்னர் அவர்களுக்கு எதிராக போக்குவரத்து பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார்.

மேலும், வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் ஆக்கிரமித்துள்ள நடைபாதைகளை 10 நாட்களுக்குள் அகற்ற வேண்டும். தவறினால் கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

சில பொறுப்பான நிறுவனங்கள் மற்றும் சங்கங்கள் கூட்டத்தில் பங்கேற்கவில்லை என்பதை அவர் விமர்சித்து, அடுத்த கூட்டத்தில் பங்கேற்காவிட்டால், சம்பந்தப்பட்ட திணைக்கள செயலாளர்களிடம் முறைப்பாடு செய்யப்படும் என எச்சரிக்கை விடுத்தார்.

மேலும், மாவட்டத்தில் புனரமைக்கப்பட வேண்டிய வீதிகள், உடைந்த வடிகால் மூடிகள், நடைபாதை ஆக்கிரமிப்பு உள்ளிட்ட பிரச்னைகள் தொடர்பான காணொலிகள் தயாரிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

(எ)



# சுப்பர் ஸ்டார் அணி சம்பியன்

திருக்கோவில், மே 30

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் சுப்பர் ஸ்டார் விளையாட்டு கழகத்தின் 38ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட மாபெரும் உதைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி நேற்று முன்தினம் திருக்கோவில் சுப்பர் ஸ்டார் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது .

இந்த போட்டியில் திருக்கோவில் சுப்பர் ஸ்டார் அணியும் விநாயகபுரம் மின்னொளி அணியும் மோதின.

இரவு பகல் ஆட்டமாக நடைபெற்ற இப் போட்டி இரவு 10: 30 மணியளவில் நிறைவுக்கு வந்தது.

இந்தப் போட்டியில் சுப்பர் ஸ்டார் அணி தண்டனை உதை மூலம் வெற்றி பெற்று சம்பியனானது.

(எ-08)

# சிறுதொழில் முயற்சி பிரிவின் சிறு விற்பனை கண்காட்சி


திருகோணமலை, மே 30

சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினரால் சிறு தொழில் முயற்சியாளர்களை ஊக்கப்படுத்தல் மற்றும் அவர்களுக்கான சந்தை வாய்பை அதிகரிக்கும் நோக்கில் நேற்று முன்தினம் புதன்கிழமை தம்பலகாமம் பிரதேச செயலக வளாகத்தில் சிறு விற்பனை கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது. தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ. சிறீபதியின் வேண்டுகோளுக்கு இணங்க நடைபெற்ற

இந்த விற்பனை கண்காட்சி நிகழ்வை தம்பலகாமம் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் இரா. பிரசாந்தன் ஆரம்பித்து வைத்தார்.

உள்ளூர் உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை அதிகரிக்கவும் ஊக்குவிக்கவும் குறித்த சிறு விற்பனை கண்காட்சி நடைபெற்றது.

இதில் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஐ. முஜீப் சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் மாவட்ட உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (எ)





வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் முருகன் ஆலய ஆடிவேல் விழாவை முன்னிட்டு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து ஆரம்பமான பாத யாத்திரை நேற்று முன்தினம் மாலை மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தை அடைந்தது.






# திருக்கோவிலில் சிறப்பாக நடைபெற்ற அகில இலங்கை தமிழ்த் தினப்போட்டி

திருக்கோவில், மே 30

அகில இலங்கை தமிழ்த் தினப்போட்டி அம்பாறை மாவட்டம் திருக்கோவில் கல்வி வலயத்துக்குட்பட்ட தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

திருக்கோவில் வலயக்கல்விப் பணிப்பாளர் இரா. உதயகுமார் தலைமையில் தமிழ் மொழித் தின விழா பண்பாட்டு ஊர்வலத்துடன் ஆரம்பமாகியது.

கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி. ஜே. அதிசயராஜ் உள்ளிட்ட விருந்தினர்கள் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர்.

2024ஆம் ஆண்டில் தேசிய ரீதியில் வெற்றி பெற்ற மூன்று மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (எ)

# பாட்டாளிபுரம் கிராமத்தில் ஆயுர்வேத மருத்துவ முகாம்

மூதூர், மே 30



திருகோணமலை மாவட்டம் மூதூர் - பாட்டாளிபுரம் கிராமத் தில் இலவச ஆயுர்வேத மருத்துவ முகாம் நேற்றுக்காலை நடைபெற்றது.

இதில், அதிகள வான பொதுமக்கள் பங்குபற்றி வைத்திய சேவை பெற்று நன்மையடைந்தனர்.

தேசிய மக்கள் சக்தியின் மூதூர் கிளையின் ஏற்பாட்டிலும் எம் கடமை அமைப்பின் அனுசரணையிலும் இந்த மருத்துவ முகாம் நடைபெற்றது.

இதன்போது பல்வேறு நோய்களுக்கான மருந்துகள் வழங்கப்பட்டதோடு வைத்திய ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

இந்த இலவச ஆயுர்வேத மருத்துவ முகாமில் மூதூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர், கிராம மட்ட பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

# கல்லாற்றில் புத்தர் சிலை ஏன்?

மட்டக்களப்பு, மே 30

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் மக்கள் மட்டும் வாழும் கல்லாற்றில் புத்தர் சிலை தொடர்ந்து நிலைகொண்டிருப்பது முறையாகுமா? தேவையா? அது நல்லிணக்கத்தை பாதிக்கலாம். எனவே, புத்தர் சிலை அகற்றப்பட வேண்டும் என்று

கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் மா. நடராஜா தெரிவித்தார்.

பெரிய கல்லாற்று பாலத்தின் அருகே பிரதான வீதியில் இராணுவம் நிலை கொண்டிருந்த காலகட்டத்திலே இந்த புத்தர் சிலை தனியார் காணியில் வைக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய உச்சம் தொடும் உலகின் வெப்பநிலை

## அடுத்த 5 ஆண்டுகளில் பேராபத்து சூழ்கிறது

வாஷிங்டன், மே 30

**அடுத்த 5 ஆண்டுகளில் உலகின் வெப்பநிலை புதிய உச்சம் தொடும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

இதேவேளை அதிக மழைப்பொழிவு, வலுவான சூறாவளி போன்றவை ஏற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2025 மற்றும் 2029இற்கு இடையில் தெற்காசியாவில் வழக்கத்துக்கு மாறான வானிலை நிகழ்வுகள் இருக்கும் என்று தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது அதே காலகட்டத்தில் உலக வெப்பநிலை புதிய உச்சத்தை எட்டக்கூடும் என்றும் குறைந்தது ஒரு வருடம் 2024 ஐ விட அதிகமாக இருக்கும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.


இதுதொடர்பில் உலக வானிலை ஆராய்ச்சி அமைப்பு, இங்கிலாந்து வானிலை ஆராய்ச்சி நிலையம் ஆகியவை அடுத்த 5 ஆண்டுகளுக்கான வானிலை கணிப்பை வெளியிட்டுள்ளன.

அதில், அடுத்த 5 ஆண்டுகளில் வருடாந்திர வெப்பநிலை புதிய உச்சம் தொடுவதற்கு 80 சதவீத வாய்ப்பு இருக்கிறது. மேலும், 10 ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்ட சர்வதேச வெப்பநிலை வரம்பை மீண்டும் மீறும் வாய்ப்பும் அதிகமாக இருக்கிறது.

நடப்பு பத்தாண்டு காலம் முடிவதற்குள், உலக வெப்பநிலை மிகவும் ஆபத்தான 2 டிகிரி செல்சியஸை எட்டும் வாய்ப்புள்ளது. அடுத்த 5 ஆண்டுகளில் ஏதேனும் ஓர் ஆண்டில் உலக வெப்பநிலை 1. 5 டிகிரி செல்சியஸை தாண்ட 86 சதவீத வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கார்னெல் பல்கலைக்கழக பருவநிலை விஞ்ஞானி நடாலி மஹோவால்ட் இந்த கணிப்பில் பங்கேற்கவில்லை. இருப்பினும் அவர் கூறுகையில், மிதமிஞ்சிய வானிலைக்கான காரணமாக வலுவான சூறாவளிகள், வலுவான மழைப்பொழிவு, வறட்சி ஆகியவை ஏற்படும். இதன் காரணமாக உயிரிழப்பும் ஏற்பட வாய்ப்புள்ளது- என்றார்.

இதுகுறித்து இங்கிலாந்து வானிலை ஆராய்ச்சி மையத்தின் பருவநிலை மாற்ற ஆராய்ச்சி பிரிவின் தலைவர் ரிச்சர்ட் பெட்ஸ் கூறுகையில், ஆர்க்டிக் பகுதியில் உள்ள பனிப்பிரதேசம், மற்ற பகுதிகளை விட 3. 5 மடங்கு வேகமாக வெப்பமடைந்து உருகும். இதனால் கடல் நீர்மட்டம் உயரும். உலகளாவிய வெப்பநிலை, ஒரு நகரும் படிக்கட்டில் மேலே ஏறுவது போல் உயர்கிறது- என்றார். (எ)



# நோர்வேயில் கடலோர பண்ணை வீட்டுக்குள் புகுந்த சரக்கு கப்பல்

## கப்டன் உறங்கியதால் விபரீதம்

ஒஸ்லோ, மே 30

நோர்வேயில் கடலோர பண்ணை வீட்டுக்குள் சரக்கு கப்பல் புகுந்து விபத்துக்குள்ளானது.

நோர்வேயில் 135 மீற்றர் நீளமுள்ள என். சி. எல். சால்டன் என்ற சரக்கு கப்பல், வழி தவறி கடற்கரையோரம் உள்ள ஜோகன் ஹெல்பர்க் என்பவரது பண்ணை வீட்டின் தோட்டத்துக்குள் புகுந்தது. அலைகள் குறைவாக இருந்ததால் கப்பலை மீண்டும் கடலுக்குள் கொண்டு செல்வதில் சிரமம் ஏற்பட்டது.

இந்த நிலையில், 4 நாட்கள் காத்திருப்புக்கு பின்னர், கடலில் பெரிய அலைகள் ஏற்பட்டதை அடுத்து கப்பல் மீண்டும் கடலுக்குள் கொண்டு செல்லப்பட்டது. இந்தச் சம்பவத்தில் ஜோகன் ஹெல்பர்க்கின் பண்ணை வீட்டு தோட்டம் சேதமடைந்த நிலையில், அதிர்ஷ்டவசமாக உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை.

கப்பலின் 2ஆம் நிலை கப்டன் பணியின்போது உறங்கியதே விபத்துக்கு காரணம் என்று கண்டறியப்பட்டுள்ளது. அவர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டு விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. (எ)



# ஏமன் விமான நிலையம் மீது இஸ்ரேல் மீண்டும் தாக்குதல்

சனா, மே 30

ஏமன் விமான நிலையம் மீது இஸ்ரேல் இராணுவம் மீண்டும் தாக்குதல் நடத்தியுள்ளது.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போர் ஓராண்டுக்கு மேல் நீடித்து வருகிறது. இந்தப் போரில் 54 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இதனிடையே, இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போரில் ஹமாஸ் அமைப்பினருக்கு ஏமனில் செயல்பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியாளர் ஆதரவு அளித்து வருகின்றனர்.

ஹமாஸுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் இஸ்ரேல் மீது அவ்வப்போது ஏவுகணை, ட்ரோன் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இந்தத் தாக்குதல்களுக்கு இஸ்ரேல் தக்க பதிலடி கொடுத்து வருகிறது.

இதனிடையே, இஸ்ரேலை குறிவைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் நேற்று முன்தினம் 7 ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தினர். இந்த ஏவுகணை, ட்ரோன்கள் இஸ்ரேல் வான் பாதுகாப்பு அமைப்பால் நடு வானில் சுட்டு வீழ்த்தப்பட்டன.


இந்தத் தாக்குதலுக்கு பதிலடியாக ஏமனில் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் உள்ள சனா விமான நிலையம் மீது இஸ்ரேல் நேற்று அதிரடித் தாக்குதல் நடத்தியது. ஏமனில் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் வசம் உள்ள சனா விமான நிலையத்தில் மொத்தம் 4 உள்நாட்டு விமானங்கள் இருந்தன. இதில் 3 விமானங்கள் கடந்த 7ஆம் திகதி இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் முற்றிலும் அழிக்கப்பட்டன. இந்த நிலையில், இஸ்ரேல் நேற்று நடத்திய தாக்குதலில் எஞ்சிய ஒரு விமானமும் முற்றிலும் அழிக்கப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்தத் தாக்குதலில் உயிரிழப்பு ஏதும் ஏற்பட்டதா? என்பது குறித்த விவரம் இதுவரை வெளியாகவில்லை. (எ)

# ட்ரம்ப் நிர்வாகத்திலிருந்து விலகினார் எலான் மஸ்க்

வாஷிங்டன், மே 30

ட்ரம்ப் நிர்வாகத்திலிருந்து விலகுவதாக டெஸ்லா நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி எலான் மஸ்க் அறிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்றபின் எலான் மஸ்க்கை சிறந்த நிர்வாகத்துக்கான துறைத் தலைவர் என்ற சிறப்பு பதவியில் அமர்த்தினார். அமெரிக்க அரசின் செலவுகளை குறைப்பது, நிறுவனங்களை சீரமைப்பது போன்ற பணிகள் அவரிடம் ஒப்படைக்கப்பட்டன. மஸ்க் பொறுப்பேற்ற பின் இதுவரை அரசின் செலவுகளில் இலங்கை



மதிப்பில் 35 இலட்சம் கோடி ரூபாயை மிச்சப்படுத்தி இருப்பதாக அறிக்கைகள் கூறுகின்றன. மஸ்க் இந்த பதவியில் 130 நாட்கள் பணியாற்றுவதற்கு ஒப்புக்கொண்டிருந்தார். அவரின் பதவிக்காலம் இந்த மாத இறுதியில் முடிவடைகிறது.

இந்த நிலையில் நேற்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் நிர்வாகத்திலிருந்து விலகுவதாக எலான் மஸ்க் அறிவித்துள்ளார். இதுகுறித்து சமூக வலைத்தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், சிறப்பு அரசு ஊழியராக எனது திட்டமிடப்பட்ட காலம் முடிவடையும் நிலையில், வீண் செலவுகளைக் குறைப்பதற்கான வாய்ப்பை வழங்கியதற்காக ஜனாதிபதி ட்ரம்புக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன் என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

# விண்ணில் ஏவி 30 நிமிடத்தில் வெடித்து சிதறிய விண்கலம்

டெக்சாஸ், மே 30

விண்ணில் ஏவப்பட்டு 30 நிமிடங்களில் ஸ்பேஸ்எக்ஸ் நிறுவன விண்கலம் வெடித்து சிதறியது.

உலக பணக்காரர்களில் ஒருவரான எலான் மஸ்க், செவ்வாய் கிரகத்தில் மனிதர்களை குடியமர்த்தும் முயற்சியின் ஒரு பகுதியாக, அவருடைய ஸ்பேஸ்எக்ஸ் என்ற பெயரிலான வர்த்தக விண்கல நிறுவனத்தின் உதவியுடன் ஆளில்லா விண்கலங்களை விண்ணுக்கு ஏவி சோதனை செய்து வருகிறார்.

இந்த நிலையில், அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள ஸ்டார்பேஸ் ஏவுதளத்திலிருந்து ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தின் ஸ்டார்ஷிப் விண்கலம் நேற்று முன்தினம் காலை ஏவுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இதன்படி, விண்ணில் ஏவப்பட்டு 30 நிமிடங்களில் அந்த விண்கலம் இலக்கை எட்டுவதற்கு பதிலாக வெடித்து சிதறியது.

இதுபற்றி ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ள எக்ஸ் சமூக ஊடக பதிவில், 403 அடி உயரம் கொண்ட இந்த விண்கலம், கட்டுப்பாட்டை இழப்பதற்கு முன்பு, 2 முறை தோல்வியடைந்த புள்ளியை கடந்து சென்றது. பின்னர் அது வெடித்து சிதறியது.

இதுபோன்ற பரிசோதனையில், நாம் என்ன கற்றுக் கொள்கிறோம் என்பதிலேயே வெற்றி வருகிறது. இந்த பரிசோதனையானது, ஸ்டார்ஷிப்பின் நம்பகத் தன்மையை மேம்படுத்தும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏனெனில், பல்வேறு கோள்களிலும் மனிதர்களின் வாழ்க்கையை உருவாக்கும் நோக்கில் ஸ்பேஸ்எக்ஸ் செயல்பட்டு வருகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ் ஜெசிகா அசத்தல் ஆட்டம்

பாரிஸ், மே 30

பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ் போட்டி தொடரில் அமெரிக்க வீராங்கனைகளான ஜெசிகா, கோகோ காப் 2ஆவது சுற்றுக்கு முன்னேறினர்.

"கிராண்ட்ஸ்லாம்" போட்டிகளில் ஒன்றான பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ் தொடர் பாரிஸில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னணி வீராங்கனையான அமெரிக்காவின் ஜெசிகா பெகுலா ரொமானியாவின் அன்கா டோடோனி உடன் மோதினார். இந்த போட்டியில் ஆரம்பம் முதல் அபாரமாக செயல்பட்ட ஜெசிகா பெகுலா 6-2 , 6-4 என்ற நேர் செற் கணக்கில் அன்கா டோடோனியை வீழ்த்தி 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார். இதே பிரிவில் நடைபெற்ற மற்றொரு லீக் ஆட்டத்தில் அமெரிக்காவின் கோகோ காப், அவுஸ்திரேலியாவின் ஒலிவியா காடெக்கியை 6-2, 6-2 என்ற நேர் செற் கணக்கில் வீழ்த்தி 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (எ)





# பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ் அல்காரஸ் அபார வெற்றி

பாரிஸ், மே 30

பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ் தொடரில் கார்லஸ் அல்காரஸ் அபார வெற்றி பெற்றுள்ளார்.

"கிராண்ட்ஸ்லாம்" போட்டிகளில் ஒன்றான பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ் தொடர் பாரிஸில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் ஸ்பெயின் வீரர் கார்லஸ் அல்காரஸ், ஹங்கேரி வீரர் பேபியன் மரோஸ்ஸான் ஆகியோர் மோதினர்.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதல் சிறப்பாக விளையாடிய அல்காரஸ் 6-1,4-6, 6-1,6-2 என்ற செற் கணக்கில் அபார வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார். (எ)

# ரிஷப் பந்துக்கு அபராதம்

லக்னோ, மே 30

லக்னோ அணித் தலைவர் ரிஷப் பந்துக்கு 95 இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

10 அணிகள் இடையிலான 18ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. இதில் லக்னோவில் கடந்த 27 ஆம் திகதி நடைபெற்ற 70ஆவது மற்றும் கடைசி லீக் ஆட்டத்தில் லக்னோ சுப்பர் ஜெயன்ட்ஸ் - றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணிகள் மோதின. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய லக்னோ அணி 20 ஓவர்களில் 227 ஓட்டங்கள் குவித்தது. அதிகபட்சமாக அணித் தலைவர் ரிஷப் பந்த் 118 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.

இதைத்தொடர்ந்து 228 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய பெங்களூரு அணி 18. 4 ஓவர்களில் 230 ஓட்டங்கள் எடுத்து 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்த நிலையில், இந்த போட்டியில் மெதுவாக பந்து வீசிய புகாரின் அடிப்படையில் லக்னோ அணியின் தலைவர் ரிஷப் பந்துக்கு இலங்கை மதிப்பில் 95 இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. மேலும், லக்னோ அணி வீரர்களுக்கு தலா 40 இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (எ)



# ஆர். சி. பி அணிக்காக கோலி 9000 ஓட்டங்கள்

லக்னோ, மே 30

ஆர். சி. பி. அணிக்காக 9000 ஓட்டங்கள் அடித்து விராட் கோலி புதிய சாதனை படைத்துள்ளார்.

லக்னோவில் நடைபெற்ற 70ஆவது மற்றும் கடைசி லீக் ஆட்டத்தில் லக்னோ - றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணிகள் மோதின.

இதில் 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் ஆர். சி. பி. அணி அபார வெற்றி பெற்றது. அதிகபட்சமாக ஜிதேஷ் ஷர்மா 85 ஓட்டங்களும் விராட் கோலி 54 ஓட்டங்களும் அடித்தனர்.

இந்த போட்டியில் விராட் கோலி 54 ஓட்டங்கள் எடுத்ததன் மூலம் ஆர். சி. பி அணிக்காக மாபெரும் சாதனை ஒன்றை படைத்துள்ளார். அதாவது, ரி - 20 போட்டியில் (ஓர் அணிக்காக அதிக ஓட்டங்கள்) ஆர். சி.பி. அணிக்காக விராட் கோலி 9000 ஓட்டங்களை கடந்துள்ளார். இந்த பட்டியலில் ரோஹித் சர்மா மும்பை அணிக்காக 6060 ஓட்டங்கள் எடுத்து 2ஆவது இடத்தில் உள்ளார். (எ)





# நோர்வே செஸ்: முதல் சுற்றில் குகேஷை வீழ்த்திய கார்ல்சன்

ஸ்டாவஞ்சர், மே 30

நோர்வே செஸ் (சதுரங்க) தொடர் முதல் சுற்றில் குகேஷை வீழ்த்தி கார்ல்சன் வெற்றி பெற்றார்.

நோர்வே கிளாசிக்கல் செஸ் போட்டி அந்த நாட்டில் உள்ள ஸ்டாவஞ்சர் நகரில் நடைபெற்று வருகிறது. 6 வீரர்கள் பங்கேற்றுள்ள இந்தத் தொடரின் முதல் சுற்றில் உலகின் முதல் நிலை வீரரான நோர்வேயின் மேக்னஸ் கார்ல்சன், உலக சம்பியனான இந்தியாவின் டி. குகேஷுடன் மோதினார்.

இதில் கார்ல்சன் வெள்ளை காய்களுடனும் குகேஷ் கறுப்பு காய்களுடனும் விளையாடினர். 4 மணி நேரத்துக்கும் மேல் நீடித்த இந்த ஆட்டத்தில் 55ஆவது நகர்த்தலின் போது குகேஷ் செய்த தவறு காரணமாக கார்ல்சன் வெற்றி பெற்றார். (எ)


# பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ் 2ஆவது சுற்றில் ரூப்லெவ்

பாரிஸ், மே 30

பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ் போட்டி தொடரில் வெற்றி பெற்ற ரூப்லெவ் 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

"கிராண்ட்ஸ்லாம்" போட்டிகளில் ஒன்றான பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ் தொடர் பாரிஸில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் ரஷ்யாவின் முன்னணி வீரரான ஆண்ட்ரே ரூப்லெவ், தென்னாபிரிக்காவின் லாயிட் ஹாரிஸ் உடன் மோதினார். இந்த போட்டியில் தொடக்கம் முதலே அபாரமாக செயல்பட்ட ரூப்லெவ் 6-4, 4-6, 6-3, 6-1 என்ற செற் கணக்கில் லாயிட் ஹாரிஸை வீழ்த்தி 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (எ)



# மகளிர் ஹொக்கி போட்டி இந்திய அணி வெற்றி

றொசாரியோ, மே 30

நான்கு நாடுகளின் மகளிர் ஹொக்கி அணிகளுக்கு இடையிலான போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றது.

ஆர்ஜென்ரீனா, இந்தியா, சிலி, உருகுவே ஆகிய 4 நாடுகளைச் சேர்ந்த ஜூனியர் மகளிர் அணிகள் இடையிலான சர்வதேச ஹொக்கி போட்டி ஆர்ஜென்ரீனாவில் உள்ள றொசாரியோ நகரில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற லீக் ஆட்டம் ஒன்றில் இந்திய அணி, ஆர்ஜென்ரீனாவை எதிர்கொண்டது. விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டம் வழக்கமான நேர முடிவில் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் முடிந்தது.

ஆர்ஜென்ரீனா அணியில் மில்லாகிராஸ் டெல் வாலியும் இந்திய தரப்பில் கனிகாவும் கோலடித்தனர். இரு அணிகளும் சமநிலை வகித்ததால் வெற்றி, தோல்வியை நிர்ணயிக்க பெனால்டி முறை கடைப்பிடிக்கப்பட்டது. இதில் இந்திய அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (எ)

# ரூர்க் மோசமான சாதனை

லக்னோ, மே 30

ஐ. பி. எல். தொடரில் மோசமான சாதனை பட்டியலில் இணைந்துள்ளார் வில்லியம் ஓ ரூர்க்.

லக்னோவில் கடந்த 27 ஆம் திகதி நடைபெற்ற போட்டியில் 74 ஓட்டங்கள் கொடுத்ததன் மூலம் வில்லியம் ஓ ரூர்க் மோசமான சாதனை பட்டியலில் இணைந்துள்ளார். இந்த பட்டியலில் ஜோப்ரா ஆர்ச்சர் (76 ஓட்டங்கள்) முதல் இடத்திலும் முகமது ஷமி (75 ஓட்டங்கள்) 2ஆவது இடத்திலும் உள்ளனர். ஓ ரூர்க் (74/2) 3ஆம் இடத்தில் உள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகிந்தானந்த...

நளின் ருவான்ஜீவ பெர்னாண்டோ ஆகியோர் விளையாட்டு உபகரணங் களை இறக்குமதி செய்து மோசடி செய்தமை தொடர்பான வழக்கிலேயே இருவருக்கும் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இருவரும் 2014 செப்ரெம்பர் முதல் டிசெம்பர் 31 வரையான காலப்பகுதியில் சதொச நிறுவனம் மூலமாக 14 ஆயிரம் கரம் போர்ட்கள், 11 ஆயிரம் டாம் போர்ட்களை இறக்குமதி செய்திருந்தனர். இதன்மூலம் 5 கோடியே 31 இலட்சம் ரூபாயை மோசடி செய்தனர் என்று கூறி இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான விசாரணை ஆணைக்குழு இருவருக்கும் எதிராக 6 குற்றப்பத்திரிகைகளை தாக்கல் செய்திருந்தது.

இது தொடர்பாக நடந்த வழக்கில், "குற்றச்சாட்டுகள் நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டன", என்று தெரிவித்த நீதிபதிகள் இருவருக்கும் 20 மற்றும் 25 ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தனர்.

**வெடிகொளுத்தி கொண்டாட்டம்**

இதேவேளை, மகிந்தானந்தவுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை வரவேற்று அவரின் சொந்தத் தொகுதியான நுவரெலியா - நாவலப்பிட்டியில் வெடிகொளுத்தி கொண்டாட்டத்தில் மக்கள் ஈடுபட்டனர்.

**மேன்முறையீடு**

இதனிடையே, முன்னாள் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேவின் 20 வருட சிறைத்தண்டனைக்கு எதிராக அவரது சட்டத்தரணிகள் மேல்முறை யீடு செய்வார்கள் என்று பிவிதுரு ஹெல உறுமயவின் பொதுச்செயலாளர் உதய கம்மன்பில நேற்று தெரிவித்தார். (ஐ)

## இந்தியாவுக்கு...

வழங்கப்பட்டது. எனவே, எந்த வகையிலும் கச்சதீவை இந்தியாவுக்கு தாரை வார்க்க முடியாது. தற் போதைய தமிழ்நாட்டு முதலமைச்சர்கள் தேர்தல்கள் வரும்போது மாத்தி ரமே கச்சதீவு பற்றி கதைப்பார்கள். கச்சதீவை இந்தியாவுக்கு வழங்குவதற்கு இலங்கை சட்டத்தில் இடமில்லை.

"இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் கைது செய்யப்படும்போது முதல் தடவையாக கைது செய்யப்படுபவர்கள் ஒரு வாரமோ அல்லது ஒரிரு தினங்களிலோ விடுதலை செய்யப்படுகிறார்கள். தொடர்ச்சியாக இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுபவர்கள் மாத்திரமே நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுகிறார்கள் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## காங்கிரஸ்...

உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பது தொடர்பில் தமிழ் அரசு கட்சி - ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் - ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி ஆகியவை சந்தித்து பேசியுள்ளன. இந்த நிலையில், தமிழ் அரசு கட்சியும் காங்கிரஸ் கட்சியும் இன்றைய தினம் சந்தித்து பேசவுள்ளன.

இந்த நிலையில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம். ஏ. சுமந்திரனும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் த. சித்தார்த்தனும் தொலைபேசி மூலம் உள்ளூராட்சி மன்றங்களில் இணைந்து ஆட்சியமைப்பது குறித்து மீண்டும் கலந்துரையாடினர்.

இதன்போதே, வெள்ளிக்கிழமை (இன்று) கஜேந்திரகுமாருடனான சந்திப்பின் பின்னர் தேவையேற்படின் மூன்று கட்சிகளும் இணைந்து கலந்து ரையாட முடியும் என்று சுமந்திரன் கூறினார் என்று சித்தார்த்தன் தெரிவித்தார்.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றங்களில் இணைந்து ஆட்சியமைப்பது குறித்து ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் சுரேஷ் பிறேமச்சந்திரன், சித்தார்த்தனுடன் தான் உரையாடிதாக சுமந்திரன் கூறியுள்ளார். (ஐ)

## இந்த...

அதிகளவிலான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தனிப்பட்ட தகராறு காரணமாகவே இடம்பெற்றன என்றும் பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

## ஞானசார...

என்று சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

ஞானசார தேரருக்கு வழங்கப்பட்ட மன்னிப்பை இரத்து செய்யக் கோரி மாற்றுக் கொள்கைகளுக்கான மையமும், காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகித் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொடவும் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுக்கள் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

இதன்போது, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சார்பாக முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபா, இந்த வழக்கு தொடர்பாக ஆட்சேபனைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இதனையடுத்து, முன்வைக்கப்பட்ட வாதங்களை ஆராய்ந்த நீதிபதிகளின் அமர்வு, இந்த மனுவை எதிர்வரும் ஒகஸ்ட் 26 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்க உத்தரவிட்டது. (ஐ)

## தமிழ்...

என்ற கருத்தை இருவரும் வெளியிட்டிருந்தனர்.

இந்த நிலையிலேயே, கஜேந்திரகுமார், சுமந்திரன் சந்திப்பு இன்றைய தினம் நடைபெறவுள்ளது.

இதனிடையே இந்த சந்திப்பில், உளளூராட்சி மன்றில் ஆட்சி அமைப்பது தொடர்பாக மாத்திரமே பேசப்படும் என்று சுமந்திரன் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந்த சந்திப்பு தொடர்பில் நேற்றைய தினம் கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசிய பேரவையின் எம். கே. சிவாஜிலிங்கம், "உள்ளூராட்சிகளில் ஆட்சி அமைப்பதுடன் மாத்திரம் நின்றுவிடாமல், பரந்துபட்ட கூட்டணி தொடர்பிலும் பேசப்படுவதாக இந்த சந்திப்பு அமைய வேண்டும்", என்று வலியுறுத்தியிருந்தமையும் நினைவில் கொள்ளத்தக்கது. (ஐ)

## எலும்புக்கூடு...

முல்லைத்தீவு மாவட்ட சட்ட மருத்துவ அதிகாரி க. வாசுதேவா, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சார்பான சட்டத்தரணி எஸ். நிரஞ்சன், காணாமல் போனோர் தொடர்பான பணிமனை சார்பான சட்டத்தரணிகள் மன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

வழக்கு தொடர்பில் கருத்து வெளியிட்ட சட்ட மருத்துவ அதிகாரி க. வாசுதேவா,

"நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில், அகழ்ந்தெடுக்கப்பட்ட 52 மனித எலும்புக்கூடுகளின் வயது, பாலினம், இறப்புக்கான காரணம் என முக்கிய விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

"நீதிமன்ற நடவடிக்கையின்போது, இறந்தவர்கள் யார் என அடையாளம் காணப்படாத நிலையில் அவர்களை அடையாளம் காணும்முகமாக நீதிவானால் காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க பிரதிநிதிகள், காணாமல் போனோர் பணிமனைக்கு இறந்தவர்களை கண்டறிய உதவுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

"இறப்புக்கான காரணங்களாக குண்டுவெடிப்பு, சூட்டுக்காயங்கள் உள்ளன. சில எலும்புக்கூடுகளில் சில பகுதிகளே இருந்தமையால் மரணத்துக்கான காரணம் கண்டறியப்படவில்லை. இந்த வழக்கு அடுத்த தவணைக்காக ஒகஸ்ட் 28 ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

கொழும்பு மாநகர முதல்வர்:

# தே. ம. சக்தியின் வேட்பாளரை அக்கட்சியினரே நிராகரிப்பர்!

கொழும்பு, மே 30

தேசிய மக்கள் சக்தியின் கொழும்பு மாநகர சபை மேயர் வேட்பாளரை அக்கட்சியினரே விரும்பவில்லை. இதனால் வாக்கெடுப்பின்போது தேசிய மக்கள் சக்தியின் சில உறுப்பினர்கள் வாக்களிப்பை புறக்கணிக்க வாய்ப்பிருக்கிறது. எனவே, கொழும்பில் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான எதிர்க்கட்சிகளே ஆட்சியமைக்கும் என்று பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், கொழும்பு மாநகரசபை உட்பட சுமார் 100 சபைகளில் ஐக்கிய மக்கள் சக்தி உட்பட எதிர்க்கட்சிகள் ஆட்சியமைக்கும். கொழும்பின் அதிகாரம் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான எதிர்க்கட்சிகள் வசமாகும் என்பதை ஸ்திரமாகக் கூறுகின்றேன். நான் குருநாகல் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தினாலும் கொழும்பில் ஆட்சியமைப்பதற்கான பலத்தை வழங்குவேன்.

ஓரிரு சுயேச்சை குழுக்கள் அரசாங்கத்துக்கு ஆதரவைத் தெரிவித்துள்ள போதிலும், பெரும்பாலானோர் எம்முடன் இணைந்துள்ளனர். ஆட்சியமைத்த பின்னர் ஆளுந்தரப்பிலிருந்து தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் அவர்களது தொகுதிகளில் அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பதற்கான நிதியை வழங்குவோம். அது இலஞ்சம் அல்ல என்றார். (ஐ)

## மல்வத்து...

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியுடனான கூட்டத்திலேயே இதனைத் தெரிவித்ததாக அவர் கூறினார்.

மேலும், மன்னார் மாவட்டத்தில் குடிதண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. பல இடங்களில் ஆழ்துளை கிணறுகள் மூலமே குடிநீர் பெறப்படுகிறது. எதிர்வரும் காலங்களில் ஆழ்துளை கிணறுகளின் தண்ணீர் உவர் நீராக மாற வாய்ப்புள்ளதாக நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் தெரிவித்துள்ளனர். எனவே, அதற்கு மாற்றீடாக ஏற்கனவே முன்மொழியப்பட்டு செயல்படுத்தப்படுகின்ற மல்வத்து ஓயா திட்டம் மந்தகதியில் உள்ளது. அதை விரைவுபடுத்த நிதி ஒதுக்க வேண்டியுள்ளது. அந்த திட்டத்தை மேற்கொள்ளும் போது முழுமையாக மன்னார் மாவட்டத்துக்கும் செட்டிகுளத்திற்கும் குடிதண்ணீரை வழங்க முடியும். அத்துடன், விவசாயத்தையும் மேற் கொள்ள முடியும் எனக் கூறினேன் என்றார்.

தவிர, வன்னி மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பிலும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்ததாக அவர் கூறினார்.

இதனிடையே, மல்வத்து ஓயா திட்டம் மூலமாக சிங்கள குடியேற்றங்களை ஏற்படுத்த சதி நடப்பதாக தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் குற்றஞ்சாட்டி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 23பேரை...

பயணிகளை ஏற்றிச் சென்ற இ. போ. ச. பேருந்து கடந்த 11ஆம் திகதி அதிகாலை நுவரெலியா - கொத்மலை - ரம்பொடை - கெரண்டிஎல்லவில் பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில், 23 பேர் உயிரிழந்தனர். 50இற்கும் மேற்பட்டோர் காயங்களுக்கு உள்ளாகினர்.

இந்த விபத்தில் பேருந்தின் சாரதியும் உயிரிழந்தார். இந்த விபத்து குறித்து விசாரிக்க 6 பேர் கொண்ட குழுவை அரசாங்கம் அமைத்தது.

இந்தக் குழு நடத்திய விசாரணையில், "சம்பந்தப்பட்ட பேருந்து சாரதி, தேவையான ஓய்வின்றி நீண்ட நேரம் பேருந்தை ஓட்டிச் சென்றமை தெரிய வந்துள்ளது. நான்கரை மணி நேர பயணத்துக்கு குறைந்தது அரை மணி நேரமாவது ஓய்வு தேவை என்றும் ஆய்வுக் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இருப்பினும், பெறப்பட்ட தகவல்களின்படி, சாரதி வெலிமடை பகுதியில் சுமார் 15 நிமிடங்கள் ஓய்வெடுத்துள்ளார். இதன்படி, விபத்து நடந்தபோது சாரதி ஆறரை மணி நேரத்துக்கும் மேலாக தொடர்ந்து பேருந்தை செலுத்திச் சென்றுள்ளார். இதனால், சம்பந்தப்பட்ட சாரதி மோட்டார் வாகன சட்டத்தின் விதிகளை மீறினார் என்று விசாரணைக் குழு முடிவு செய் துள்ளது.

எனினும், விபத்துக்குக் காரணமான அனைத்து காரணிகளுக்கும் சாரதி மட்டுமே பொறுப்பல்ல என்பதையும் விசாரணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ)

## மாகாண...

கையகப்படுத்துவதாக அமையும் - இவ்வாறு இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ப. சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

மன்னார் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் பங்கேற்ற அவர், பின்னர் நேற்று முன்தினம் ஊடகங்களை சந்தித்த போதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் உரிமைப் போராட்டத்துக்குக் கிடைத்த அரசியல் யாப்பு ரீதியான தீர்வே மாகாண சபை முறைமையாகும். தமிழ் மக்களுக்கான இறுதித் தீர்வாக மாகாண சபை முறைமை அமையாது விடினும் ஓரளவுக்கேனும் தம்மைத தாமே ஆளும் அதிகாரம் மாகாண சபை சட்டத்தில் உள்ளது. மாகாண சபையிடம் மாகாண சுகாதார துறையை அபிவிருத்தி செய்வதற்கு போதுமான நிதி வளம் இல்லை என்பதால் மத்திய அரசின்கீழ் கொண்டுசெல்வதாக காரணம் முன்வைக்கப்படுகிறது.

மாகாண சபை சுயமாக இயங்கக் கூடிய வகையில் அதனை பலப்படுத்துவது மத்தியஅரசின் கடமையாகும். இதுவரை, மாகாணத்துக்கான நிதியை திரட்டக்கூடிய வகையிலான எந்தவிதமான விசேட திட்டங்களையும் மத்தியில் ஆட்சி செய்த அரசாங்கங்கள் செய்யவில்லை. மாறாக, வெளிநாட்டு முதலீட்டாளர்களை கொண்டு மாகாணத்துக்கான அந்நிய செலாவணியை ஈட்டக்கூடிய வகையிலான திட்டங்கள் வகுக்கப்பட்டபோதிலும் அவற்றை நடைமுறைப்படுத்தவதற்கு மத்திய அரசு மறைமுகமாக பல தடைகளை போட்டது.

13ஆவது திருத்தச்சட்டத்தில் குறிப்பாக சுகாதாரம், கல்வி, விவசாயம் போன்ற துறைகள் மாகாண சபையின் நேரடி நிர்வாகத்தின்கீழ் காணப்படுகின்றன. ஏற்கனவே, தேசிய பாடசாலைகள் என்ற போர்வையில் மாகாண கல்வி அமைச்சின்கீழ் இயங்கிவந்த முன்னணி பாடசாலைகள் மத்திய அரசின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. இதனால் ஏற்படும் ஆபத்தை அறியாதவர்களாக எம்மவர்களும் துணை போயுள்ளனர் என்பது கவலைக்குரிய விடயமாகும்.

மாகாண சுகாதார துறையை அபிவிருத்தி செய்வதற்கு அதனை மத்திய அரசாங்கத்தின்கீழ் கொண்டு வருவது ஒருபோதும் தீர்வாக அமையாது. மாறாக, இருக்கும் அதிகாரங்களையும் மத்திய அரசாங்கம் கையகப்படுத்துவதற்கு நாமே வாய்ப்பை வழங்கியதாக அமைந்துவிடும். கடந்த அரசாங்கங்கள் செய்த தவறை இந்த அரசாங்கமும் தொடர்கிறதா என்ற சந்தேகம் ஏற்படுகிறது - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## அதிக உணர்திறன் கொண்ட ஸ்கானருடன் ஏழு பேர் கைது!

மன்னார், மே. 30

மன்னார் சிலாவத்துறை பகுதியில் ஒரு வாடகை வாகனத்தில் அதிக உணர்திறன் கொண்ட ஸ்கானருடன் பயணித்த 07 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக சிலாவத்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் சூரியவெவ, புத்தளம், கனகராயன்குளம், மன்புரி, புதுக்குடியிருப்பு, தம்போவ மற்றும் சிலாவத்துறை பகுதிகளைச் சேர்ந்தவர்கள்,

இவர்கள் 31 முதல் 60 வயதுக்குட்பட்டவர்கள். போரின்போது புதைக்கப்பட்டதாகக் கூறப்படும் புதையல் மற்றும் தங்கத்தைத் தேட சந்தேக நபர்கள் ஸ்கானரைப் பயன்படுத்தினரா என்பது குறித்து விசாரணைகள் நடந்து வருகின்றன. (அ)

## வடக்கு ரயில் சேவைகள் மீண்டும் இடைநிறுத்தம்!

### 5 ரயில் பாலங்கள் புனரமைப்புக்காக

கொழும்பு, மே. 30

மஹவவிலிருந்து அனுராதபுரம் வரையிலான பிரதான ரயில் மார்க்கமூடான வடக்கு ரயில் சேவைகள் மீண்டும் ஒரு மாதம் நிறுத்தப்படும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

மஹவவிலிருந்து அனுராதபுரம் வரையிலான பிரதான ரயில் பாதையில் ஐந்து பாலங்களில் புனர்நிர்மாணப் பணிகள் நடைபெற்று வருவதனால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.சுமார் 100 ஆண்டுகள் பழமையான இந்தப் பாலங் களை அகற்றிவிட்டு, புதிய பாலங்கள் அமைக்கப்பட உள்ளன.

மேலும், ஐந்து பாலங்களும் இந்திய கடன் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டு வருவதாகவும், இதற்கு சுமார் 15 மில்லியன் அமெரிக்க டொலர் செலவாகும் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய கடன் திட்டத்தின் கீழ் 9127 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் இந்த ரயில் பாதையின் புனரமைப்புப் பணிகள் முடிக்கப்பட்டு, கடந்த ஆண்டு செப்ரெம்பரில் ரயில் போக்குவரத்துக்காக திறக்கப்பட்டபோதிலும், சமிக்ஞை அமைப்பின் கால தாமதமாகி வருவதாகவும், சமிக்ஞை இல்லாததால் தற்போது அந்தப் பகுதியில் டோக்கன் அமைப்பில் ரயில்கள் இயக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. (அ)

## இந்திய உதவியில் நிர்மாணிக்கப்பட்ட சந்திரன் கிராம வீடுகள் கையளிப்பு!



முல்லைத்தீவு, மே. 30

முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்திய அரசாங்கத்தின் உதவியின் கீழ் கேப்பாப்புலவு பிலவுக்குடியிருப்பு கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்ட "சந்திரன் கிராமம்" வீடுகள் கையளிப்பு நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் நேற்று முன் தினம் புதன்கிழமை கேப்பாப்பிலவு பிலக்குடியிருப்பில் நடைபெற்றது.

சந்திரன் கிராமத்தில் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் இந்திய அரசாங்கத்தின் உதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட 24 வீடுகள் இந்திய தூதுவரால் சந்தோஷ் ஜாவினால் கையளிக்கப்பட்டன.

இந்த கையளிப்பு நிகழ்வில் இந்நிய தூதுவர் சந்தோஷ்ஜா, நகர அபிவிருத்தி, நிர்மாணம் மற்றும் வீடமைப்பு அமைச்சர் அனுர கருணாதிலக மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திலகநாதன், நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச் சின் மேலதிக செயலாளர் எம்.எம்.நஷிமுதீன்,தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் தலைவர் அரவிந்த ஸ்ரீநாத், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாம கேஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (அ)

# உதவிகளுக்கு இந்தியாவை நம்பியிருக்கின்றது வடக்கு!

### மாகாண ஆளுநர் நா.வேதநாயகன்




முல்லைத்தீவு, மே. 30

**"எமக்கு உடனடியாக உதவிகளைச் செய்யும், எமக்கு மிக வேண்டப்பட்ட நாடாக இந்தியா இருக்கின்றது. வடக்கு மாகாணம் உதவிகளுக்கு இந்தியாவை நம்பியிருக்கின்றது. எங்களுக்கு இது வரை உதவிகளை வழங்கிய இந்திய மக்களுக்கும், இந்திய அரசாங்கத்துக்கும் வடக்கு மக்களின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்."**

-இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.இந்திய அரசாங்கம் மற்றும் இந்திய மக்களிடமிருந்து மனிதாபிமான உதவிகள் வழங்கும் நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நேற்று முன் தினம் புதன்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-முல்லைத்தீவு மாவட்ட செயலராக நான் பணியாற்றியிருக்கின்றேன். இங்குள்ள கடற்றொழில் சமூகம் எதிர்கொள்ளும் பிரச்னைகள் எனக்கு மிக நன்றாகவே தெரியும். போரால் பாதிக்கப்பட்ட நீங்கள் மீள்குடியமர்வின் பின்னர் சட்டவிரோத மீன்பிடியால் பாதிக்கப்பட்டிருந்தீர்கள். உங்கள் பெறுமதியான வலைகளையும் இழந்திருந்தீர்கள். இன்று இந்திய மக்களும், இந்திய அரசாங்கமும் உங்களுக்கு பெறுமதியான வலைகள் உள்ளிட்ட பல்வேறு உதவிகளை வழங்குகின்றனர்.

இந்திய மக்களும், இந்திய அரசாங்கங்களும் எங்களுக்கு காலத்துக்கு காலம் பல்வேறு உதவிகளை வழங்கியிருந்தன. முக்கியமாக இந்திய வீட்டுத் திட்டத்தை குறிப்பிடவேண்டும். அவர்களால் எமது ரயில் பாதைகள் புனரமைக்கப்பட்டன. இன்றைய தினம் முல்லைத்தீவு மருத்துவமனையின் புனரமைப்பை இந்தியா பொறுப்பேற்பதாக இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா அறிவித்திருக்கின்றார். அதற்கு அவருக்கு நன்றிகளைக் கூறிக்கொள்கின்றேன். எதிர்காலத்திலும் எமது மக்களுக்கான உதவிகளை இந்தியா தொடரவேண்டும்-என்றார். (அ)

## அரசின் செயல்பாடுகளில் மக்கள் பெரும் அதிருப்தி!

### ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார்



கொழும்பு, மே. 30

அரசாங்கத்தின் செயற்பாடுகளில் திருப்தியடையாத தால் தேர்தலில் மக்கள் ஆணை கிடைக்கவில்லை என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சிச் சபைகளுக்கு தெரிவான உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் செய்யும் நிகழ்வு கொழும்பில் நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-உள்ளூராட்சிச் சபைகளுக்கு தெரிவானோருக்கு நாம் பயிற்சிகளை வழங்கவுள்ளோம். உள்ளூராட்சிச் சபை தொடர்பான பயிற்சியும் அமைப்பார்களுக்கான பயிற்சியும் வழங்கப்படும்.

ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் ஆகியவற்றுக்குப் பின்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்பட்டது.

இந்தத் தேர்தல் விசேடமானதாகும். ஏனென்றால் இவ்வாறான தேர்தல் நடத்தப்படும்போது ஆட்சி அதிகாரம் உள்ள கட்சிக்குத் தான் அதிக வாக்குகள் கிடைக்கப்பெறும். ஆனால் அதற்கு மாறாகவே இம்முறை முடிவுகள் அமைந்துள்ளன.

மீண்டும் மக்கள் ஆணை வேண்டும் என்றும் ஏற்கனவே மக்களால் தரப்பட்ட ஆணையை உறுதிசெய்யுமாறும் நாட்டின் ஜனாதிபதி கோரிக்கை விடுத்தார்.

அரசாங்கத்துக்கு பாராளுமன்றத்தில் கிடைத்த 68 இலட்சம் வாக்குகள் 45 இலட்சமாக குறைவடைந்தது. அதாவது 23 இலட்சம் பேர் ஜனாதிபதி கேட்ட உறுதிப்பாட்டை வழங்கவில்லை.

எனக்குத் தெரிந்த வகையில் முதன் முறையாக ஓர் அரசாங்கம் வீழ்ச்சியை சந்தித்துள்ளது.மக்கள் ஆணை கிடைக்கவில்லை என்பது இதுவரையான அரசாங்கத்தின் செயற்பாடுகளில் வாக்காளர்கள் நம்பிக்கை கொள்ளவில்லை என்று அர்த்தமாகும்.

எமது வாக்கு வங்கியில் சுமார் இரண்டு இலட்சம் அதிகரிப்பு காணப்படுகிறது. ஒரு வகையில் வாக்குகள் அதிகரித்துள்ளமை குறித்து மகிழ்ச்சியடையலாம்.மறுபுறம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வாக்குகள் கிடைத்துள்ளன என்பதை சிந்திக்க வேண்டும்-என்றார். (அ)

## பயங்கரவாதச் சட்டம் அரசினால் நீக்கப்படும்

### சிவில் சமூகப் பிரதிநிதிகளிடம் நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார

கொழும்பு, மே. 30

பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படும் ஆனால் வெளிநாட்டு அச்சுறுத்தல்களில் இருந்து தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதற்கு மற்றுமொரு சட்டம் அவசியம் என நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும் புதிய சட்டம் அவசியமில்லை என சிவில் சமூக பிரதிநிதிகள் அவரிடம் விடுத்த வேண்டுகோளுக்கு பதில் அளிக்கையிலேயே அவர் இதனை கூறினார்.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் சிவில் சமூக பிரதிநிதிகள் நேற்று நீதியமைச்சரை சந்தித்தனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ரத்து செய்வது குறித்து ஆராயும் குழுவிடம் ஒப்படைக்கப்பட்ட சமர்ப்பிப்பில் கையொப்பமிட்ட பிரதிநிதிகள் குழு, நேற்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவைச் சந்தித்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ரத்து செய்யவேண்டும். புதிய பயங்கரவாதச் சட்டத்தால் அதை மாற்றக் கூடாது என்ற நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்தியது.

வரலாற்று ரீதியாக அரசாங்கம் தன்னை பாதுகாப்பதற்காக பயங்கரவாத தடைச் சட்டத்தை ஒரு ஆயுதமாக பயன்படுத்தி வந்துள்ளது என்பதை இந்தக் குழு எடுத்துக்காட்டியது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள நீண்டகால தமிழ் அரசி யல் கைதிகளை விடுவிக்கவேண்டும் என்றும் அவர்க ளில் சிலர் 15-16 ஆண்டுகளாக குற்றச்சாட்டுகள் இல்லா மல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் கள் சுட்டிக்காட்டினர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனடியாகரத்து செய்யவேண்டும். அதுவரை அதன் பயன்பாட் டுக்கு தடை விதிக்க வேண்டும். மேலும் அதை ஒரு புதிய பயங்கரவாதச் சட்டத்தால் மாற்றக்கூடாது என்றும் அவர்கள் கோரினர்.

இதனையடுத்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ரத்து செய்வதாக நீதியமைச்சர் அமைச்சர் உறுதியளித்தார். ஆனால் வெளிநாட்டு அச்சுறுத்தல்களிலிருந்து தேசிய பாதுகாப்பை உறுதி செய்ய மற்றொரு சட்டம் அவசியம் என்றும் அவர் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.05.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.